பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

உங்கள் மனம் விரும்பும்
வேலைவாய்ப்பை
உடன் பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
Fb : winstarjob bank
021 320 2789

விழுயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 07,வியாழக்கிழமை 20.04.2017 கதிர் 165

# கேப்பாபிலவு படை முகாம் பிரதேச நிலங்கள் நேற்று நேரில் பார்வையிட்டுக் கள ஆய்வு



## 138 காணிகளில் ஆக 67 மட்டுமே உடனடியாக விடுவிக்கப்படும் சாத்தியம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட இடங்களை முதலில் நேரடியாகக் கள ஆய்வு செய்யும் பொறிமுறைக்கு இணங்க, நேற்று மாலை முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு படைமுகாம் பகுதி அமைந்துள்ள பிரதேசம், சம்பந்தப்பட்ட தரப்புகளினால் கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

அங்கு 138 பேரின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ள நிலையில், கள ஆய்வுத் தகவல்களின் படி ஆக 67 பேரின் காணிகள் மட்டுமே ஓரிரு மாதங்களுக்குள்ளாவது விடுவிக்கப்படக் கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிகின்றது.

பக்கம் 18 »

## பாடசாலைகளில் இருந்து 500 மீற்றருக்குள் சிகரெட் விற்பனை செய்வதற்குத் தடை!



பாடசாலையில் இருந்து ஐந்நூறு மீற்றர் தூரத்துக்குள் சிகரெட் விற்பனை செய்வதற்கு விரைவில் தடை வரும்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயார் செய்யப்பட்டு அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் மற்றுமொரு சிகரெட் நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கு அரசு தயாராகிவருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியிருப்பதுமுற்றிலும் தவறானது எனக் கூறிய அமைச்சர், புகைத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் அரசு செயற்படுகின்றது என்றார்.

சிகரெட் பெட்டியுடன் இல்லாமல் தனித்து சிகரெட் விற்பனை செய்வதற்கும்தடை விதிக்கப்படுகின்றது என்றார் அவர். (உ)

## யாழ். மருதங்கேணியில்
# கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தால் சூழல் பாதிப்பு ஏற்படும் என்பது தவறாம்!



யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். மருதங்கேணிக் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் சூழலுக்கு ஒருவிதமான பாதிப்பும் இல்லை எனவும், 'நாறா' நிறுவனம் வழங்கிய ஆய்வு அறிக்கையிலும் சூழல் பாதிப்பு உள்ளதாகக் குறிப்பிடப்படவில்லை எனவும் 'நாறா' நிறுவனத்தின் சமுத்திரவியல் துறைத்

பக்கம் 18 »

## முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில்
# கோட்டாபய கடற்படை முகாமுக்காக சுவீகரித்த 617 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி போர்!



முல்லைத்தீவு, ஏப். 20

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் இலங்கை கடற்படை சுவீகரித்துக் கோட்டாபய கடற்படை முகாம் அமைத்துத் தங்கியுள்ள தமது 617 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரி, அந்தப் பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளனர். அது இன்றும் தொடரும்.

பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் இந்தக் காணி விடு

பக்கம் 18 »

## மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச் சரிவில் 15 பேருடன் வான் ஒன்றும் சிக்கியது?

கொழும்பு, ஏப். 20

மீதொட்டமுல்லவில் கடந்த புத்தாண்டு தினத்தில் குப்பை மேடு சரிந்து விழுந்த போது தஹாம் மாவத்தையில் காணப்பட்ட வானுடன் அதில் இருந்த 15 பேர் குப்பைக்குள் சிக்கிக்கொண்டனர் எனப் பிரதேசவாசிகள் முறைப்பாடுசெய்துள்ளனர்.

இதனடிப்படையில், சம்பவம் நடந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீதொட்டமுல்லவில் 15 அடி

பக்கம் 18 »

## மீதொட்ட முல்ல அனர்த்தம்:
# வீடுகளை இழந்த 98 குடும்பங்களுக்கு இன்று முதல் புதிய வீடுகள் கையளிப்பு

கொழும்பு, ஏப். 20

மீதொட்டமுல்ல குப்பை மேடுசரிந்து அனர்த்தத்திற்குள்ளான மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, முழுமையாகப் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த 98 குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை இன்று முதல் உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

பக்கம் 18 »

## ராஜீவ் கொலை வழக்கு எதிரி
# முருகனைச் சந்திக்க தவம் கிடக்கும் தாய்!



சென்னை, ஏப். 20

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் வேலூர் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகனைப் பார்ப்பதற்கு அவரது தாயாருக்கு தடைவிதிக்கப்

பக்கம் 18 »

## அளப்பு அருணாசலம்



## சு.க. மற்றும் மஹிந்த அணியுடனும் கூட்டமைப்பு தனித்தனியே பேசும்

கொழும்பு, ஏப். 20

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியுடனும் பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்தச் சந்திப்புக்களை விரைவில் நடத்துவதற்குக் கூட்டமைப்பின் உயர் பீடம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்

பக்கம் 18 »

# முள்ளிக்குளம் மக்களின் கிராமத்தை அபகரித்துள்ளமை கவலைக்குரியது

## ஜனாதிபதிக்கு மன்னார் மறை மாவட்டம் மகஜர்







மன்னார், ஏப்.20

முள்ளிக்குளம் மக்களின் கிராமத்தை, அவர்களின் வளங்களை அபகரித்து வைத்துக் கொண்டு கடற்படையினரும் அவர்களின் குடும்பத்தாரும் இவ்விடத்தில் சுகபோகம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை கடற்படையினரிடமிருந்து விடுவித்து முள்ளிக்குளம் மக்களின் அகதி வாழ்விலிருந்து விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று மன்னார் மாவட்ட அரச அதிபர் ஊடாக கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மக்களின் கிராமத்தை கடற்படையினரிடமிருந்து மீட்டுத்தருமாறு நேற்று புதன்கிழமை மன்னார் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா, யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன், வட மாகாண சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் மன்னார் பேராலயத்தில் இறை வழிபாட்டைத் தொடர்ந்து மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.விக்ரர் சோசை அடிகளார் மற்றும் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோர் உரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து ஆயர் மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் முன் செல்ல பதாகைகள் ஏந்திய வண்ணம் பிரதான வீதிகளினூடாக மன்னார் மாவட்ட செயலகத்துக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

அங்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரியவிடம் ஜனாதிபதிக்கான மகஜரை ஆ[illegible] கிங்ஸிலி சுவாம்பிள்ளை கையளித்தார். (ஐ-112)

## பிரிட்டனில் அகதி அந்தஸ்திலுள்ளோரை வெளியேற்றச் சட்டமூலம் வெளியீடு!

### இலங்கையர்களும் உள்ளடக்கம்

கொழும்பு, ஏப்.20

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களை வேகமாக வெளியேற்றும் சட்டமூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 25 முதல் 28 வேலை நாள்களுக்குள் அகதிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நிறைவு செய்யப்படும்.

அத்துடன் அகதிகளது விண்ணப்பங்களை விசாரணை செய்யும் நீதிபதிக்கு, அந்த விண்ணப்பதாரியை அனுமதிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் மேலதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

அகதி அந்தஸ்து கோருவோரில் பிரித்தானியாவில் தங்கி இருக்கத் தகுதியற்றவர்களை உடனடியாக வெளியேற்றுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் ஊடாக அகதிகள், முகாம்களில் தடுத்து வைக்கப்பட வேண்டிய காலமும் குறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 100 நாள்களுக்கு மேலும் அகதிகள் முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகிறது.

இந்தச் சட்டம், பிரித்தானியாவில் உள்ள ஈழ அகதிகள் மீதும் அதிக தாக்கம் செலுத்தவுள்ளது என்று கூறப்படுகிறது. (ஐ)

## நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணிகளில் குப்பை கொட்டத் தடை

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.20

மே மாதம் முதலாம் திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் குப்பைகளைக் கொட்டுவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எந்தவொரு நகர சபைக்கோ, பிரதேச சபைக்கோ அல்லது அரச நிறுவனத்துக்கோ தமது குப்பைகளைக் கொட்டுவதற்குத் தேவை ஏற்பட்டால் அவை தமது சொந்தச் செலவில் காணியொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

குப்பைகளை மீள் சுழற்சி செய்வதற்கு கிலோவொன்றுக்கு 7 தொடக்கம் 10 ரூபா வரை செலவு ஏற்படுகிறது.

எந்தவொரு நிறுவனமும் அந்தத் தொகையை செலுத்தத் தயாராக இல்லாதபடியால் குப்பைகள் குவிந்து வருகின்றன.

மீதொட்டமுல்லவில் குப்பைகளைக் கொட்டுவதைத் தவிர்க்குமாறு 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கொழும்பு மாநகர சபைக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மா[illegible] சபை குப்பைகளைக் கொட்ட பல்வேறு மாற்று இடங்களைத் தெரிவுசெய்தது. எனினும், அந்த இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதற்கு அந்தப் பிரதேச மக்கள் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்து வந்தமையால் தொடர்ந்து மீதொட்டமுல்லவிலேயே குப்பைகளைக் கொட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.-என்றார். (ஐ)

## போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் மீது கத்தி வெட்டு!

### மயிரிழையில் உயிர் தப்பினார்

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் எம்.ஏ.பி. ஹேமச்சந்திர கடந்த ஞாயிற்றுக்கிழமை தக்ஷன அதிவேகப் பாதை வழியாக மாத்தறை பஸ் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த போது இனந்தெரியாத நபரொருவர் மேற்கொண்ட கத்தி வெட்டிலிருந்து மயிரிழையில் தப்பியிருக்கிறார்.

புதுவருட விடுமுறையின்போது பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த போக்குவரத்து வசதிகளைக் கண்காணிப்பதற்காகத் தனது அதிகாரிகளுடன் அவர் மாத்தறை பஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாத்தறை பஸ்நிலையத்தில் தனியார் பஸ்களில் கப்பம் வாங்குபவர்கள் ஏராளமாக இருக்கின்றனர் என்று ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு கிடைத்திருந்த நிலையில் அவர்களை அங்கிருந்து அகற்ற அவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த கப்பக்காரர் ஒருவரே இந்தத் தாக்குதலுக்கு முயன்றுள்ளார் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. மாத்தறை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாளை மின்தடை



யாழ்ப்பாணம், ஏப்.20

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை யாழ். பிரதேசத்தில் பாரதிவீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு மற்றும் வளலாய் ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் பரப்பங்கண்டல், சிறுகுளம், பெரிய குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## சாவகச்சேரியில் நேற்று கவனவீர்ப்பு



தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/322 கிராம அலுவலர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடமை நேரத்தில் தாக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொடிகாமம் பொலிஸாருக்கு எதிராக நேற்று புதன்கிழமை காலை சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ-21)

# பெண்களின் வீரவரலாறு எழுதப்பட்ட மண்ணில் அவர்களுக்கான உரிமைகள் இன்னும் வழங்கப்படவில்லை

## சமத்துவம், சமூக நீதிக்கான அமைப்பின் சந்திரகுமார் வேதனை



கிளிநொச்சி, ஏப். 20

பெண்கள் தொடர்பில் வித்தியாசமான வீரம் செறிந்த வரலாறு எழுதப்பட்ட நம் மண்ணில் யுத்தகளத்தில் தலைமை தாங்கிய பெண்களைக்கொண்ட சமூகத்தில் இன்னும் பெண்கள் தொடர்பில் மாற்றம் ஏற்படவில்லை என்பது கவலைக்குரியது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்வி, பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் இடம்பெற்ற பெண்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெண்கள்தங்களதுஉரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்றால் முதலில் அதற்கான நிலையை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கைத் தீவில் பெண்களின் அரசியல் தலைமைத்துவ விகிதம் வெட்கப்பட வேண்டியதாக உள்ளது. 225 நாடாளுமன்றஉறுப்பினர்களில் வெறும் பத்துப் பதினைந்து பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் உள்ளனர். இப்படி இருக்கும்போது எப்படி நாடு பெண்களுக்கான முன்னுரிமையை வழங்கும்?

பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள், சட்டங்கள் என்பனவற்றுக்கு எதிராக நியாயத்தை வழங்குவதற்கு முதலில் அவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும்.

இது வெறுமனே நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, வடக்கு, கிழக்குப்பிரதேசங்களில்உள்ள மாகாண சபைகளிலும் நிலைமை இவ்வாறுதான் உள்ளது. வடக்கு மாகாணசபையில் 38 உறுப்பினர்களில் ஒரு பெண்தான்உறுப்பினராக உள்ளார். உள்ளூராட்சி சபைகளிலும் இதே நிலைமைதான் .

இலங்கையின் அண்டைய நாடுகளில் அரசியலில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் இலங்கையில் இல்லை. முஸ்லிம் நாடான பங்காளாதேஷில் 46 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை வழங்கியிருக்கிறது. பாகிஸ்தானும் இலங்கையை விட முன்னிலை வகிக்கிறது. மிக மோசமான பெண் ஒடுக்குமுறைகள் மிகுந்து காணப்பட்ட ஆப்கானிஸ்தானில் தற்போது பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்துக் காணப்படுகிறது. ஏன் இலங்கையில் அது முடியவில்லை?

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தில் பெண்களுக்கு 40 வீதம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட போதும், நாட்டின் பெரிய கட்சிகள் - அதிக அங்கத்துவத்தைப் பெறுகின்ற கட்சிகள் - எல்லாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் குறைந்தது 25 வீதமாவது பெண்களுக்கு இருக்க வேண்டும் என்று நாடாளுமன்றப் பெண் பிரதிநிதிகள் வலியுறுத்திய போது, அது பல குழுவிவாதங்களில்வந்தபோது நான் கூட அந்த நேரத் தில் அதனை வலியுறுத்தி, முத லில் 25வீதமாவதுவழங்கவேண்டும் என்று கூறியிருந் தேன். ஆனால் பழமைவாதிகள் பலர் அதனை மறுத்துவிட்டனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் உள்ள பெண் பிரதிநிதிகள் தாமாக அரசியல் நின்று வந்தவர்கள் மிகமிகக் குறைவு. யாராவது இறந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் மனைவியாக அல்லது மகளாக அவர் இருப்பார்.

பெண் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வர முடியாது. அதற்கு எங்கள் சமூகமும் பழக்கப்படவில்லை.

இவ்வாறு பெண்கள் தொடர்பிலான நிகழ்வுகளில் பெண்கள் உரிமைகள் பற்றி வாய்கிழியப் பேசுவோம். அத்தோடு முடித்துக்கொண்டு சென்றுவிடுவோம். மீண்டும் மறுபடியும் அடுத்த வருட நிகழ்வில் ஒன்று கூடிப் பேசுவோம். இது இங்குள்ள நிலைமை.

வடக்கைப் பொறுத்தவரை கல்வியில் அதிகளவான மாணவிகளே சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். வடக்கில் அதிகளவான பெண்கள் அரச உத்தியோகத்தர்களாகக் காணப்படுகின்றனர். பலர் திணைக்களங்களின் தலைவர்களாகவும் அமைச்சின் செயலாளர்களாகவும் உள்ளனர். இருந்தும் என்ன பயன்? பெண்களின் அடிப்படை உரிமைகள் நிலைநிறுத்தப்படவில்லை. எனவே, பெண்களுக்கான உரிமைகள் நிலைநாட்ட - பாகுபடற்றபால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்த - வேண்டும் என்றால் அதை நிலைநாட்ட எழுச்சியோடு முன்வரவேண்டும்.

எங்களின் சமூகக் கட்டமைப்பு இன்றும் பெண்களுக்கு எதிராகவே உள்ளது. பெண்கள் தொடர்பில்வித்தியாசமானவீரம் செறிந்த வரலாறு எழுதப்பட்ட மண்ணில் - யுத்தகளத்தில் தலைமைதாங்கியபெண்களை கொண்டசமூகத்தில் – இன்னும் பெண்கள் தொடர்பில் மாற்றம் ஏற்படவில்லை என்பது கவலைக் குரியது.

பெண்கள் இயல்பாகவே தங்களுக்குரிய உரிமைகளையும், சமத்துவத்தையும் பெற்றுக் கொள்வதற்காகப் போராடத் துணிய வேண்டும். அதற்கான குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும். அப்போதுதான் பெண்களின் உரிமைகளை நிலைநாட்டும் சூழல் உருவாகும். பெண்கள் அவர்களுக்கு எதிரான நடவடிக் கைகளுக்குக் குரல் கொடுக்கும் கட்டத்திற்குத் தயார்ப்படுத்தப்பட வேண்டும். - எனவும் தெரிவித் தார்.

கிளிநொச்சி கல்வி, பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் கணனி ஆசிரியை திருமதி தர்மினி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருணைப்பால செயலாளர் தியாகராசா, பொருளாளர் சுஜீவன், கிளிநொச்சிவலயக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மலையத்தில் குளவிக் கொட்டு

ஹட்டன், ஏப். 20

மலையத்தில் வட்டவளை விக்டன் மற்றும் ஹட்டன் செனன் ஆகிய தோட்டப் பகுதிகளில் இடம்பெற்ற இரு வேறு குளவிக் கொட்டுத் தாக்குதல்களில் 9 பேர் பாதிப்புற்றனர்.

வட்டவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இந்த 9பேரில் மூவர் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (உ)

## வித்தியா கொலை: சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

ஊர்காவற்றுறை, ஏப். 20

2015 மே மாதம் 13 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 12 சந்தேகநபர்களும் நேற்று மீண்டும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களின் விளக்க மறியல் மே 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## இலங்கை மீனவர்கள் எழுவர் விடுதலை

சென்னை, ஏப்.20

தமிழகக்கடலோரத்தில்வைத்து கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த ஏழு இலங்கை மீனவர்களை தமிழக நீதிமன்றம் நேற்று விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இன்று இலங்கைக்குஅனுப்பிவைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## இலங்கை மீனவர்கள் எழுவர் கைது

இந்திய கடல் எல்லைக்குள் சென்று சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 7 இலங்கை மீனவர்களை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்த இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர காவல் படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்கள் தமிழ்நாடு நாகப்பட்டினம் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மீனவர்கள் சென்றிருந்த ஆழகடல் மீன்பிடி படகையும் இந்திய கடலோர காவல் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

# சாவகச்சேரி கிராம அலுவலர்கள் நேற்று கவனயீர்ப்பு நடவடிக்கை

சாவகச்சேரி, ஏப்.20

யாழ்ப்பாணம்–மீசாலை பகுதியில்கிராமஅலுவலகர்ஒருவர்மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்தும் அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சாவகச்சேரி பிரதேச கிராமஅலுவலகர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மீசாலை அல்லாரை ஜே/322 கிராம அலுவலகர் பிரகாஷ் என்பவர் தனது கிராம அலுவலகர் பிரிவில் அதிகமான சத்தத்தை ஒலிபரப்பிய நபரது வீட்டுக்கு சென்று அது தொடர்பாக விசாரித்த போது அங்கிருந்தவர்கள், குறித்த கிராம அலுவலரைத் தாக்கியிருந்தனராம். அவ்வீட்டில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த, குறித்த வீட்டின் உறவினர்கள் அல்லது நண்பர்களாக அறியப்பட்டவர்களே இவ்வாறு தாக்குதலை நடத்தியிருந்தார்கள் என்று கூறப்பட்டது.

கிராம அலுவலகரது தொலைபேசியைப் பறித்து அவர் மீது மிலேச்சத்தனமானதாக்குதலைச் சம்பந்தப்பட்டோர் நடத்தியிருந்தார்கள். இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கிராம அலுவலகர் உடனடியாகவே கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்த போதும், ஞாயிற்றுக்கிழமையில் கிராம அலுவலகர் ஏன் பணிக்குச் செல்ல வேண்டும் என அலட்சியமாக பதிலளித்து முறைப்பாடு தொடர்பில்விசாரணைசெய்வதில் பொலிஸார் அசண்டையீனமாக செயற்பட்டனர் எனவும் கிராம அலுவலகரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் குறித்த கிராம அலுவலகர் தாக்கப்பட்டமை தொடர்பிலும், அது தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொள்ளாது அசண்டையீனமாகச் செயற்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்தும் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம அலுவலகர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி நேற்று புதன்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் ஒன்றுகூடிய கிராம அலுவலகர்கள் குறித்த தாக்குதல் சம்பவத்தை கண்டித்து கண்டன வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளைத்கள் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 'கிராம அலுவலகர்களின் பாதுகாப்பை உறுதி செய்', 'காவாலிகளைக் கைது செய்ய முடியா விட்டால்உன்காக்கிச்சட்டையைக் கழற்று', 'கிராம அலுவலகரின் கடமை நேரம் தெரியா தவரா கொடிகாமம் பொலிஸார்?', 'போதையற்ற தேசத்தில் போதை வெறியர்களின் அட்டகாசமா?', 'கொடிகாமம்பொலிஸேபோகாதே சமாதான தூது' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வர்கள் தாங்கியிருந்தனர்.

மேலும் குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார் இனிமேலும் உடன் நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளை கைது செய்யாவிட்டால், இப்போராட்டத்தை ஏனைய பிரதேச செயலகங்களின் கிராம அலுவலர்களுக்கும் விஸ்தரித்து பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர் எனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கிராம அலுவலகர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இதேவேளை சாவகச்சேரி பிரதேச செயலக கிராம அலுவலகர்கள் முன்னெடுத்த குறித்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் அப்பிரதேச மக்கள் கிராம அலுவலகர்களூடாகத் தாம் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது பாதிப்புற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (மற்றொருசெய்தி 2 ஆம் பக்கத்தில்)

## புதையல் தோண்டிய 9 பேர் கைது!

வவுனியா, ஏப். 20

வவுனியா - பெரிய உலுக்குளம், புதுமடுக்குளம் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெரிய உலுக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனுராதபுரம், கொலன்னாவ, மதவாச்சி மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## சாவகச்சேரியில் நேற்று அஞ்சலி

கொலன்னாவைப் பகுதியில் குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததில் பல பொதுமக்கள் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காணாமல் போயுள்ளனர். இவ் அனர்த்தத்தில் உயிரிழந்த பொதுமக்களுக்கு சாவகச்சேரிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் செவ்வாய்க்கிழமை மாலை 3மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்வு சாவகச்சேரி இளைஞர் கழக சம்மேளன தலைவர் நக்கீரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் இளைஞர் சேவைகள் அதிகாரி அ.குனேஸ், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அருட்கரன் மற்றும் தென்மராட்சி பிரதேச இளைஞர் கழக இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வழிபட்டனர். (உ -2)

## அரியாலை யூதாததேயூ ஆலயத் திருவிழா

அரியாலை, ஏப். 20

யாழ்ப்பாணம் – அரியாலை யூதாததேயூ யாத்திரைத்தலத் திருவிழா இன்று வியாழக்கிழமை பங்குத் தந்தை மௌலீஸ் அடிகளார் தலைமையில் மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தினமும்மாலை5மணிக்குத் திருதின ஆராதனையுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் பவனியும் ஆசீரும் இடம்பெறும். 30 ஆம் திகதி ஞாயிறு காலை 7 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலியும் திருச்சொரூபப்பவனியும் ஆசீரும் நடைபெறும். (இ)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தமிழக அரசியலில் 'விசுவாசம்'!

தமிழ் நாட்டில் முதலமைச்சராகவிருந்த ஜெயலலிதா காலமாகியமையை அடுத்து அவரது அ.இ.அ.தி.மு.கழகத்துக்குள் வெடித்த பூகம்பம் ஒரு சுற்று ஆட்டத்தை முடித்துக் கொண்டு தற்காலிகமாக நீறுபூத்த நெருப்பாக அடங்கும் சூழ்நிலைகள் தோன்றியுள்ளன.

ஜெயலலிதாவின் கீழ் அ.தி.மு.க. மிகவும் கட்டுக்கோப்பான கட்டமைப்புக்குள் இயங்கியது. ஹிட்லர் பாணி இராணுவ ஆட்சியைத்தான் கட்சிக்குள் ஜெயலலிதா வைத்திருந்தார். பேசுவதற்குக் கூட அவரை நெருங்க முடியாது. வரவேற்பதற்கான பூச்செண்டைக் கைளிப்பதாயினும் கூட - மூத்த அமைச்சர்களாயினும் - அவரின் முன்னால் கூனிக் குறுகி வளைந்து நின்றுதான் வழங்கும் நிலைமை.

இந்திய சுதந்திர தின விழாவில் பங்குபற்றுவதற்காகக் காரில் ஒய்யாரமாக வந்த முதல்வர் ஜெயலலிதா, காருக்குள் அமர்ந்திருக்க, அமைச்சர்கள் பட்டாளம் வரிசையாகக் கூனிக் குறுகி பாதத்தில் (காரின் டயரில்) விழுந்து கும்பிடத் தயாராக நின்ற காட்சியைப் படம் பிடித்துப் பிரசுரித்த ஒரு நாளிதழ் அதற்குக் கீழ் *'நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. இவர்களுக்கு (அமைச்சர்களுக்கு) சுதந்திரம் எப்போது?'* - என்று அடிக் குறிப்பிட்டிருந்தது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் சட்ட சபையில் அவரது சட்டமன்ற உறுப்பினர்கள் மேசையில் தட்டி ஆரவாரம் - மகிழ்ச்சி - வரவேற்பு - தெரிவிக்கின்றமைக்குக் கூட ஒரு வரன்முறை - கட்டுக்கோப்பு - நேர்த்தி ஒழுங்கு - இருந்தது. அதை மீறிச் செயற்பட முடியாது; ஆரவாரம் பண்ண முடியாது.

ஜெயலலிதா மறைவின் பின்னர் சின்னம்மாவின் கை ஓங்கியது. 'சின்னம்மா சசிகலாதான் ஜெயலலிதா' - என்ற சாரப்பட முழு அ.தி.மு.கவும் அந்த அம்மாவுக்குப் பின்னால் சரணாகதி அடைந்தது - கொஞ்சம் உப்புப் போட்டுச் சாப்பிட்ட உணர்வு இருந்த காரணத்தால் ஓ.பன்னீர்ச்செல்வம் போன்ற ஒரு சிலரைத் தவிர.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் சசிகலாவின் முதலமைச்சர் கனவு தகர்ந்து போகத் தமது பெறாமகன் டி.தினகரன் மூலம் சிறையில் இருந்தபடி காய் நகர்த்தினார் சசிகலா.

சசிகலாவின் 'றப்பர் ஸ்டாம்ப்' ஆகத் தினகரன் செயற்பட்டார். ஆனால், அவரும் இப்போது சட்டச் சிக்கலில் மாட்டிக் கொண்டார்.

முதலில் ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக கோடி கோடியாகப் பணம் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்த குற்றச்சாட்டு. அதனால் இடைத் தேர்தலும் ஒத்திவைக்கப்பட சட்டரீதியான பதவி கிட்டும் வாய்ப்பும் தினகரனுக்குத் தள்ளிப் போயிற்று.

அதற்கிடையில் முடக்கப்பட்ட இரட்டை இலைச்சின்னத்தைத் திரும்பப் பெறுவதற்காகப் பல கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முயற்சித்தார் என்ற அடுத்த சட்டச் சிக்கலில் சிக்கினார் தினகரன்.

அவ்வளவுதான், இதுவரை சின்னம்மாவை 'இதய தெய்வம்' என்று குறிப்பிட்டு அவரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 'செத்த நாயிலிருந்து உண்ணி கழருவது போல' மெல்ல சின்னம்மாவையும் அவர் அணியையும் கைவிடத் தயாரானார்கள்.

சின்னம்மா சிறையில். அவரது 'றப்பர் ஸ்டாம்ப்' பெறாமகனும் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்ற இக்கட்டில்.

பிறகென்ன? அ.தி.மு.கழக எம்.எல்.ஏக்களின் நன்றியுணர்வு கொப்பளித்தது. கட்சியையும் ஆட்சியையும் காப்பாற்றுகின்றோம் என்ற பெயரில் 'சின்னம்மா அன்ட் கோ'வை நட்டாற்றில் விட்டது கழக எம்.எல்.ஏக்கள் குழு.

ஓ.பன்னீர்ச்செல்வம் அணி படித்துப் படித்துச் சொன்னபோது புரியாத விடயம் - கட்சிக்குள் தனிக் குடும்ப ஆட்சி என்ற விவகாரம் - இப்போது அந்தக் குடும்பம் சட்டத்தின் பிடியில் சிக்குண்டதும் இந்த எம்.எல்.ஏக்களுக்கும் அமைச்சர்களுக்கும் தாராளமாகப் புரியத் தொடங்கியிருப்பதுதான் விநோதம்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் கோடி கோடியாகத் தினகரன் தரப்பு பணத்தை வாரி இறைத்தது என்றால் எதற்காக? ஒரு புறம் தினகரன் வெற்றிக்கு என்றாலும் மறுபுறம் அவர்கள் சார்ந்த கட்சி வெற்றிக்காகத்தானே...!

அதேபோல, பிழையான வழியிலேனும் கட்சியின் இரட்டை இலைச் சின்னத்தை மீட்க வேண்டும் எனத் தினகரன் முயன்றிருப்பாராயின் அது கூட அந்தக் கட்சிக்காகத்தானே...?

ஆனால், சட்டச் சிக்கல் என்று வந்ததும் அவரையும், அவரின் சின்னம்மாவையும் கட்சி எம்.எல்.ஏக்கள் ஒரே நாளில் கைவிட்டு, காலை வாரி, அணி மாறத் தலைப்பட்டு விட்டார்கள். ஏன் தெரியுமா? அரசியலில் நன்றி - விசுவாசம் - என்ற சொல்லுக்கு இடமில்லை. அதனால்தான்.

ஜெயலலிதா இறந்ததும், ஓ.பன்னீர்ச்செல்வத்தைக் கைவிட்டு, 'சின்னம்மா' பின்னால் இந்த எம்.எல்.ஏக்கள் திரண்டமை கூட அரசியல் விசுவாசம் கருதியல்ல. சுயநல லாபத்துக்காகத்தான். இப்போது சின்னம்மா அணியைக் கூண்டோடு காலைவாரி கைவிட அவர்கள் தயாரானதும் கூட அதே காரணத்துக்காகத்தான்.

எங்கே தினகரனுக்குப் பின்னால் நின்றால், சட்டப் பிடியில் அ.தி.மு.க. சிக்குப்பட தங்களின் அரசு கவிழ்ந்து, பதவி பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில், ஒரே நாளில் கொள்கையை மாற்றிப் போட்டு, குடும்ப அதிகாரத்தை ஒழிக்கின்றோம் என்று தெரிவித்து, புதிய வியாக்கியானம் கூறத் தலைப்பட்டு விட்டார்கள்.

தமிழக அரசியலில் பொதுவாக பிரதானமானது அதிகாரமும் ஆட்சியும்தான். கொள்கை, கோட்பாடு, இலட்சியம் எல்லாம் இரண்டாம் பட்சம்தானே...!

# ஒற்றுமையே உரிமையை பெற்றுக் கொடுக்கும்!

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கிளிநொச்சி - கரைச்சி பிரதேச கலாசார நிகழ்வில் வெளியிடப்பட்ட நூலின் ஊடாக மலையக மக்கள் கொச்சைப் படுத்தப்பட்டுள்ளமையை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, பிரதேச வாதத்துடன் செயற்படாது, ஒற்றுமையாகச் செயற்பட்டால் மாத்திரமே உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச கலாசார நிகழ்வில் வெளியிடப்பட்ட 'கரை எழில்' நூலில் கிளிநொச்சியும் மலையக மக்களும் என்ற கட்டுரை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையக மக்கள் தாய், தந்தை பெயர் தெரியாதவர்கள், வன்னி மலையகப் பெண்கள் பாலியல் நடத்தையில் ஈடுபடுகின்றனர், ஈழப் போராட்ட இயக்கத்தில் தேசப்பற்றில்லாமல் கௌரவத்துக்காகவே மலையக மக்கள் இணைந்து கொண்டிருந்தனர் என்று மலையக மக்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் கட்டுரை ஒன்று எழுதப்பட்டிருந்தது.

இவ்வாறான கருத்துக்களை என்னால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மலையகத் தமிழர்களுக்கும், வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்களுக்கும் மத்தியில் ஒரு உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சித்து வருகின்றோம்.

எனவே, பிரதேசவாதத்துடன் செயற்படாது, ஒற்றுமையாகச் செயற்பட்டால் மாத்திரமே உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் ஈழப் போராட்டத்துக்காகவே பல முறை சிறைவாசம் அனுபவித்திருந்தார்.

அத்துடன், ஈழப் போராட்டத்தில் மலையகத் தமிழர்களும் அதிகளவில் உயிர் நீத்திருந்தார்கள். - என்றார். (எ)

# சீன புலமைப்பரிசிலை கோட்டாபய நிராகரிக்கக் கூடிய சாத்தியம்

கொழும்பு, ஏப். 20

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ சீனப் புலமைப் பரிசிலை நிராகரிக்கக்கூடிய சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீன புலமைப் பரிசிலை பெற்றுக் கொண்டு சீனாவில் சென்று கல்வி கற்பதா, இல்லையா என்பதனை இன்னும் கோட்டபாய ராஜபக்ஷ தீர்மானிக்கவில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

ஓராண்டு காலம் சீனாவில் தங்கியிருந்து கல்வி கற்க வேண்டும். இதனால் நாட்டை விட்டு வெளியேறிச்செல்ல அவர் விரும்பவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது புலமைப் பரிசில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு சிங்கப்பூரில் கல்வி கற்று வரும் கோட்டாபய இந்த மாத இறுதியில் நாடு திரும்ப உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# சுற்றுலாத்துறை, மதுபான நிலையங்கள் மூலம் கிடைக்கும் நிதியிலேயே அரசு இயங்குகிறது

## யோகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

தற்போது அரசைக் கொண்டு நடத்தப் போதியளவு நிதி இல்லாமையால், சுற்றுலாத்துறை மற்றும் மதுபானநிலையங்களை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டே அரசு இயங்குகிறது. - என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு எருவில் கிராமத்தில் உள்ள மூன்று கழகங்களுக்கும், வாழ்வாதார உதவியைப் பெறும் ஒருவருக்குமான நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை எருவில் நூலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் மக்கள் நலன் சார்ந்த எத்தனையோ பல திட்டங்களை அரசிடம் முன் வைத்திருக்கின்றோம். ஆனால், அந்தத் திட்டங்கள் எவையும் உரிய கால நேரத்துக்குள் முடிவடைவதில்லை. இதன் காரணமாக மக்கள் மத்தியில் நாங்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழர் பிரதேசங்களில் இன்னும் எத்தனையோ அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டி இருக்கின்றது.

அதற்கான எத்தனையோ செயற்றிட்டங்களை அரசிடம் ஒப்படைத்திருக்கின்றோம். அதனை உரிய கால நேரத்துக்குள் செய்து முடிக்க முடியாத நிலையில் அரசு திண்டாடிக் கொண்டு இருக்கின்றது.

எது, எப்படி இருந்தாலும் நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் எமது மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்திப் பணிகளில் எடுத்த முயற்சிகளில் சற்றும் விலகாமல் செயற்பட்டு வருகின்றோம்.

நாங்கள் மக்களிடம் கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குச் சில இடங்களில் சண்டை பிடிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்றோம். இதனை மக்கள் உணர முடியாமல் இருக்கின்றமை தான் எங்களுக்கும் மனவேதனை தருகின்ற விடயம்.

நாங்கள் மக்களுக்காகச் செய்யும் வேலைகளை செய்யவில்லை என்று விமர்சிக்கும் கூட்டத்தைத்தான் காண்கின்றோம். ஆனால், சமூக உணர்வோடு செயற்படுகின்ற சிலரும் இருக்கின்றார்கள். - என்றார். (எ)







விபத்தற்ற பயணமே
விருப்பத்துக்குரிய பயணம்!

இரவு வேளைகளில் தூர வீச்சு ஒளியைப் போட்டுச் செல்லும் போது, எதிர் வரும் வாகனச் சாரதிக்குக் கண் கூசுவதைத் தவிர்க்கக் குறுந்தூர ஒளியைப் போடுவோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.


### நாளை

21.04.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: அவிட்டம் முப.இ. 10.53 வரை
திதி: தசமி பி.இ. 1.03 வரை
சுபநேரம் : 6.01 - 7.31 வரை
இராகுகாலம்: 10.31 - 12.01 வரை

# மீதொட்டமுல்ல மக்களுக்கு நாம் வீடுகளை வழங்குவோம்

## நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.20

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மீதொட்டமுல்லவுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டவர்களின் தேவை கள் தொடர்பில் அறிந்து கொண்டார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் வீடுகளை வழங்குவோம் என்று இதன்போது பிரதமர் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் விஜயம் செய்திருந்த பிரதமர் நேற்று அதிகாலை நாடு திரும்பிய நிலையிலேயே இங்கு விஜயம் செய்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி மீதொட்டமுல்ல குப்பை மேடு இடிந்து விழுந்து ஏற்பட்ட அனர்த் தம் காரணமாக 32 பேர் உயிரிழந்தனர். சுமார் 150 வீடுகள் சேதமாக்கப்பட்டு, 180 குடும்பங்களைச் சேர்ந்த 625 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மீதொட்டமுல்லவில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான 98 வீடுகளை வழங்க, நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய தற்போது நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள 60 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படவுள்ளன என்பதோடு, ஏனையவை விரைவில் அமைத்துக் கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்த வீடுகளுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்ய வீடொன்றுக்கு இரண்டரை லட்சம் ரூபாவரை வழங்க அரசு தயாராகவுள்ளது என்றும் அது குறித்து தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# மீதொட்டமுல்ல பகுதிகளில் தோல் நோய் பரவும் அபாயம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.20

கொலன்னாவை, மீதொட்டமுல்ல பகுதியில் தோல் நோய் பரவுவதாகவும், அந்தப் பிரதேசத்துக்கு செல்வோர் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் உப செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கமகே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தோல்நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில், அந்தப் பிரதேசத்தில் நடமாடும் வைத்திய நிலையங்கள் பல ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது.

இதேவேளை, அந்தப் பகுதிக்குத் தேவையான மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்று நோய்கள் பரவுமாயின், அந்தப் பிரதேசத்துக்கு செல்வதற்கு, 40 வைத்தியர்கள் அடங்கிய குழு தயார் நிலையில் இருக்கின்றது.

அனர்த்த முகாமைத்துவ பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்துள்ள வைத்தியர்கள் 20 பேர், சுகாதார அமைச்சின் வசம் உள்ளனர். அவசர தேவையேற்படுமாயின், அந்த வைத்தியர்களையும் குறித்த இடத்துக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, வயிற்றோட்டம் பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. அவற்றுக்கும் முகங்கொடுப்பதற்கும் தயார் நிலையில் உள்ளோம்.

மீதொட்டமுல்ல பகுதியில் தோல் நோய் பரவுகிறது. அந்தப் பிரதேசத்துக்குச் செல்வோர் மிகுந்த அவதானத்துடன் இருக்கவும்.-என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# விசேட விவாதம் கோருகிறது மஹிந்த அணி!

கொழும்பு, ஏப்.20

மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பில் மஹிந்த அணியினர் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்றைக் கோரியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக் காணும் நோக்கில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், மீதொட்டமுல்ல குப்பை மேட்டு சரிவு அனர்த்தத்தை முன்வைத்து, நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய பொருளாதார நெருக்கடியை மறக்கடிக்க முயற்சிப்பதாக மஹிந்த தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கை கிரிக்கெட் அணியினர் மீதொட்டமுல்லவில் நிவாரணம்

கொழும்பு, ஏப்.20

கொலன்னாவ - மீதொட்டமுல்ல பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் சிலர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

தற்காலிகமாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களை இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடியமையுடன், அனுதாபங்களையும் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து நிவாரணங்களையும் வழங்கியுள்ளார்.

ரங்கன ஹேரத், திசர பெரேரா, நிரோஷன் டிக்வெல ஆகியோர் இந்த நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)





# குப்பைமேடு சரியலாம் என்று ஏற்கனவே அரசு அறிவித்தது

## உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.20

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழும் அபாயம் உள்ளது என்று நேர காலத்தோடு அதிகாரிகளால் அந்தப் பிரதேச மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது என்று அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பிரதேச மக்களை அந்த இடங்களில் இருந்து வெளியேறுமாறு கடந்த 05 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அம் மக்களுக்கு வழங்கப்பட்ட கடிதம் தம்வசம் உள்ளது என்றும் அமைச்சர் உறுதி செய்துள்ளார்.

அந்தப் பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட கடிதத்தைப் பெற்றுக்கொண்டதை உறுதிசெய்யும் வகையில் ஒப்பமிட்ட ஆவணங்களும் கிராம சேவை அதிகாரியிடம் உள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்புக்களை விட்டுவிட்டு, கலந்துரையாடல் மூலம் அரசுடன் இணைந்து எழுந்துள்ள பிரச்சினைக்கு முகம்கொடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் அமைச்சர் அந்தப் பிரதேச மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ)

# நிவாரணப் பணிகள் தொடர்கின்றன

கொழும்பு, ஏப்.20

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததன் காரணமாக ஏற்பட்ட அனர்த்தத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் நேற்றுத் தொடர்ந்தும் இடம்பெற்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய பல்துறைசார் அரச அதிகாரிகளுடன் இணைந்து பாதுகாப்புப் படையினர், முழுமையான சேதம் தொடர்பான மதிப்பீடு மற்றும் இந்தப் பகுதியில் எதிர்காலங்களில் இது போன்ற அனர்த்தங்கள் நிகழாமை தொடர்பாக ஆராயும் ஒரு பூர்வாங்க மதிப்பீட்டுத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த மதிப்பீட்டுத் திட்டத்தில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், நில அளவையியல் திணைக்களம், பிரதேச செயலகம், பேராதனை பல்கலைக்கழக புவியியல் பீடம், புவியியல் ஆராய்ச்சி திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் கொழும்பு மாநகர ஆணையாளர் உள்ளிட்ட பலர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் குடிதண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, அனர்த்தம் காரணமாக வீடுகளை இழந்த குடும்பங்கள் என்.டி. சில்வா மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவசர நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில் மருத்துவ நடவடிக்கைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தால் நாகமுள்ள, தர்மபுர, நீல்கேவத்த மற்றும் விஷித்துனேவத்த ஆகிய பிரதேசங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அனர்த்தம் நிலவிய பகுதியைச் சூழவுள்ள 130 வீடுகளைச் சேர்ந்த பலர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்



# அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு ரயில் கடவைப் பாதுகாவலர்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு,ஏப்.20

அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக, அந்த மாவட்ட ரயில் கடவைப் பாதுகாவலர்கள் நேற்றுப் புதன்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பில் பாதுகாவலர்கள் தெரிவிக்கையில் -

பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக ஆறு மாதங்களுக்குத் தற்காலிக அடிப்படையில் ரயில் கடவைப் பாதுகாவலர்களாக நியமனங்களைப் பெற்றுக்கொண்ட நாங்கள், கடந்த நான்கு வருடங்களாக இந்தத் துறையில் கடமையாற்றி வருகிறோம். இதுவரையில் எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளமே எங்களுக்கு வழங்கப்படுகிறது. அதுவும் 30 நாள்களும் வேலைக்குச் சென்றால் மட்டுமே இந்தச் சம்பளம் வழங்கப்படும். இந்தச் சம்பளத்தை வைத்தே எங்களது வாழ்க்கைச் செலவைப் பார்த்துக்கொள்கிறோம்.

மாவட்ட அரசியல்வாதிகள் பாராமுகமாகவே இருந்து வருகின்றனர். இந்த நல்லாட்சி அரசாவது எங்களது நிலைமையை உணர்ந்து, நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டகாரர்கள் பொலிஸ் உயரதிகாரிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ச)

# ரயில் கடவைப் பாதுகாவலர்கள் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஏப்.20

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்குப் பாதுகாவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆயிரத்து 230 பேர், கடந்த 4 வருடங்களாக நிரந்தர நியமனம் மற்றும் சம்பள உயர்வு என்பன வழங்கப்படாமல் அடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றனர்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்பற்ற 688 ரயில் கடவைகளைப் பாதுகாப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தால் ஒரு நாளுக்கு 250 ரூபா வீதம் மாதம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்துக்கு மேற்படி ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். இதில், ஆயிரத்து 230 பேருக்கு இதுவரை நிரந்தர நியமனமோ அல்லது தற்காலிகக் கடமையாளர்கள் என்ற எந்தவிதமான எழுத்து மூலமான ஆவணங்களோ வழங்கப்படாத நிலை உள்ளது.

அரச திணைக்களம் ஒன்றில் தொடர்ந்து 180 நாள்கள் பணியாற்றினால் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும். இருந்தும் இதுவரை அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் கட்டாயப்படுத்தி கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு இவர்கள் எவ்வாறு வாழ்க்கையை நடத்துவது?- என்றார். (ச)

## மைதான வளாகத்தில் வகுப்பறைக் கட்டடம் அமைப்பதை எதிர்த்து

# சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மாணவர் ஆர்ப்பாட்டம்!

அம்பாறை, ஏப்.20

சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதான வளாகத்தில், வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்படுவதைக் கண்டித்து அந்த வித்தியாலய மாணவர்கள், நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வித்தியாலயத்தில் வகுப்பறைகளுக்கான பற்றாக்குறை காணப்படும் நிலையில், அதை நிவர்த்தி செய்யும் நோக்கில் விளையாட்டு மைதான வளாகத்தில் இரண்டு மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில், அண்மையில் இதற்கான அடிக்கல் நடப்பட்டு, பூர்வாங்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து, தங்களின் விளையாட்டுத் திறமை மழுங்கடிக்கப்படும் எனத் தெரிவித்த மாணவர்கள், அக்கட்டடத்தை வேறிடத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேற்படி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (ச)







அன்னை பூபதியின் 29 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அவரின் சமாதியில் இடம்பெற்றது.

சிவில் சமூக அமைப்பான 'இணையம்' ஏற்பாடு செய்திருந்த இந்த நினைவேந்தல் நிகழ்வில் தீபமேற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டமையைப் படங்களில் காணலாம்.

# பட்டதாரிகளுக்கு ஆதரவு தெரிவித்து திருமலையில் மோ.சைக்கிள் பேரணி!

திருகோணமலை மாவட்டத்தில் 49 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று புதன்கிழமை பொது மக்களால் மோட்டார் சைக்கிள் பேரணி முன்னெடுக்கப்பட்டது.



மூதூர் கிழக்கு நாவலடிச் சந்தியில் ஆரம்பமான இந்தப் பேரணி கிண்ணியா வழியாக தம்பலகாமம் ஆதரவாளர்களையும் இணைத்துக் கொண்டு திருகோணமலையைச் சென்றடைந்தது.

இந்நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளுடன் பேரணிக்காரர்கள் கலந்துரையாடினர்.

இதன்போது, மூதூர் பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் க.திருச்செல்வம் தெரிவிக்கையில்:-

போராட்டத்தின் வடிவம் மாறவேண்டும். அப்போது தான் உங்களுக்கான தீர்வு கிட்டும். தீர்வு கிடைப்பதற்கான போராட்டத்தை நீங்கள் ஒன்று கூடி முன்னெடுத்தால் அதற்கான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராக உள்ளோம். -என்றார். (ச)

# புலம்பெயர் நாட்டவர்கள் உதவ முன்வர வேண்டும்!

தமிழ் மக்கள் ஏனைய சமூகங்களிடம் அடிமைகளாக வாழவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இதில் இருந்து முற்றாக விடுதலை பெறவேண்டுமாக இருந்தால், புலம்பெயர் தேசத்தில் உள்ள மக்கள் இங்குள்ளவர்களுக்கு உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

- இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு எருவில் கிராமத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இந்தப் பிரதேசங்களை பொறுத்தவரையில் பல தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகள் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படவேண்டும். போராட்டக் காலங்களில் தங்களது உயிரைத் துச்சமென நினைத்து போராடிய பல போராளிகள் தற்போது சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுகிறார்கள். அவர்களில் பலர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளனர். அவர்கள் முன்னேற்றத்துக்கு அனைவரும் உதவ வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இந்திய பிரதமர் மோடியின் கொழும்பு விஜயத்தின் போது கூட்டு அபிவிருத்தி உடன்பாடு செய்யவுள்ளது இலங்கை!

## இந்திய ஊடகம் தகவல்


கொழும்பு, ஏப். 20

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள விஜயத்தின் போது, கூட்டு அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட வாய்ப்புகள் உள்ளன என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பாரிய கடன் சுமையில் சிக்கியுள்ள இலங்கை, சீனாவின் பிடியில் இருந்து விடுபடுவது கடினமானது என்பதால், இதனைச் சமநிலைப்படுத்தும் வகையில், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுடன் இணைந்து கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை முன்வந்துள்ளது.

இந்தியாவுடன் கூட்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைக் கையெழுத்திட இலங்கை தயாராக இருக்கிறது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொழும்புக்கான விஜயத்தின்போதே, இந்த உடன்பாடு கையெழுத்திடப்படக் கூடும்.

அதேவேளை, இருதரப்பு உறவுகளை மீளாய்வு செய்வதற்கு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாத இறுதியில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்பதை அதிகாரபூர்வ வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

பொருளாதார ரீதியான சாத்தியப்பாடுகள் இருக்கின்றன எனத் தோன்றாமையால், இந்தியா கடந்த காலங்களில் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஆர்வம் காட்டவில்லை.

அதேவேளை, தாம் ஆட்சியில் இருந்தபோது அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை மேற்கொள்ளுமாறு இந்தியாவிடமே முதலில் கேட்டோம் என்றும் இந்தியா மறுப்புத் தெரிவித்த பின்னரே சீனாவிடம் அதனை ஒப்படைத்தோம் என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

பொருளாதார ரீதியாக சாத்தியமற்றது என்ற பயத்தால் தான் இந்தியா அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மறுத்திருந்தது.

இந்த வாய்ப்பை இந்தியா பயன்படுத்திக் கொள்ள மறுத்ததால், அங்கு சீனாவின் கடுமையான தலையீடுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு சிறப்பு பொருளாதார வலயம் ஒன்றை அமைக்கவும், மத்தள விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கும் சீனாவுக்கு இலங்கை அனுமதி அளித்துள்ளது.

வணிக ரீதியான அம்சங்களை ஒதுக்கி வைத்து விட்டுப் பார்த்தால், திருகோணமலை துறைமுகத்தை கூட்டாக இணைந்து அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை எடுத்துள்ள முடிவு நல்லதோர் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது என்று இந்திய அரசு மற்றும் சுதந்திரமான மூலோபாய விவகார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மூலோபாய சிந்தனையாளர் பிரம செல்லானி தெரிவிக்கையில்-

இலங்கையில் சீனாவின் முதலீட்டிலான திட்டத்தின் மூலம், இந்தியப் பெருங்கடலில் சீனாவுக்குச் சொந்தமான, சீனாவால் நடத்தப்படும் பகுதி ஒன்று உருவாகும்.

திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுடன் இணைந்து கூட்டாக அபிவிருத்தி செய்யும் திட்டம், இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிர்ச்சமனிலையான செயற்பாடாக இருக்க முடியாது.

ஆனால், கொழும்பு தாழ்ந்து போவதற்கு எதிரான செல்வாக்கை கட்டியெழுப்புவதற்கு அது உதவுவதாக இருக்கும்.- என்று கூறியுள்ளார்.- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வெசாக் விழாவில் கலந்து கொள்வதற்காக அடுத்த மாத நடுப்பகுதியில் பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**லஸந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணை:**

# மூத்த படை அதிகாரிகள் முரண்பாடான வாக்குமூலம்!

கொழும்பு, ஏப். 20

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்ட மூன்று மூத்த முன்னாள் படை அதிகாரிகளும் முரண்பாடான வாக்குமூலங்களை அளித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவால் முன்னாள் கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, கூட்டுப் படைகளின் தலைமையக நடவடிக்கைப் பணிப்பாளராக பணியாற்றிய மேஜர் ஜெனரல் குமார ஹேரத், கூட்டு நடவடிக்கைக்கான தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மனோ பெரேரா ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

காலை 10 மணி தொடக்கம், பிற்பகல் 2 மணி வரை இந்த விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இதேவேளை, லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாகக் காவல்துறை புலனாய்வு அதிகாரி தகவல் பரிமாறியிருந்த போதும், அடுத்த வாரம் நடந்த வாராந்த கூட்டுப் படைகளின் தலைமையக கலந்துரையாடலில் இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் கூட்டப்படுவதற்கு முன்னர் கூட்டுப்படைத் தலைமையகத்தில் இந்தக் கூட்டம் நடத்தப்படுவது வழக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# பிரித்தானிய அமைச்சரின் இலங்கை விஜயம் ரத்து!

## திடீர் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் எதிரொலி

கொழும்பு, ஏப். 20

பிரித்தானியாவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக அமைச்சர் அலோக் சர்மா இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

பிரித்தானியாவில் திடீர் பொதுத்தேர்தல் அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதை அடுத்து, அலோக் சர்மாவின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகம் நேற்று அறிவித்தது.

இன்று தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை



அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என்று கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் முன்னர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், பிரித்தானிய அமைச்சர் அலோக் சர்மா நாளை கொழும்பில் உள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் 'பிரெக்சிற்குப் பிந்திய உலகில் சவால்களும் வாய்ப்புகளும்' என்ற தலைப்பில் உரையாற்றுவதற்கும் திட்டமிட்டிருந்தார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாத அமர்வில் பிரித்தானியா சார்பில் பங்கேற்றிருந்த அலோக் சர்மா, வழங்கப்படும் கால அவகாசத்துக்குள் ஜெனீவாத் தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---


# இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா ஓய்வு பெறுவதற்கு முடிவு?

கொழும்பு, ஏப். 20

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா ஓய்வு பெறுவதற்கு முடிவு செய்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லெப்டினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு வழங்கப்பட்ட இரண்டாவது சேவை நீடிப்பு வரும் 2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையிலேயே அவர் ஓய்வுபெற முடிவுசெய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

தமது அதிகாரபூர்வ வாகனங்களை எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதிக்குள் மீள ஒப்படைக்குமாறு இராணுவத் தளபதி, தனது அதிகாரி



களுக்குப் பணித்துள்ளார்.

இலங்கையின் கூட்டுப் படைகளின்தளபதியாக உள்ள எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலக எதிர்வரும் ஜூலை மாதம் 16ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையில், கூட்டுப்படைகளின் தளபதி பதவியை, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா குறிவைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

கூட்டுப் படைகளின் தளபதியாக லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா நியமிக்கப்படுவாராயின், இலங்கையின் அடுத்த இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, மூன்றாவது சேவை நீடிப்புக்கு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா விண்ணப்பிக்கவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்



# எந்தக் காரணம் கொண்டும் மின் விநியோகம் தடைப்படாது

## உறுதியளித்தார் மின் வலு அமைச்சர்

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலுள்ள மின் உற்பத்தி இயந்திரத்திரம் ஒன்றில் ஏற்பட்ட கோளாறு காரணமாக எந்தக் காரணம் கொண்டும் மின் விநியோகத்தில் தடை ஏற்படாது என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை நேற்று முன் தினம் காலை அமைச்சர் சென்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தின் முதலாவது மின்பிறப்பாக்கி இயந்திரம் கடந்த 17 ஆம் திகதி செயலிழந்துள்ளது. அந்த இயந்திரத்தின் பொய்லருடன் தொடர்பான நீர் ஆவியா குதல் குழாய் தொகுதியில் ஏற்பட்ட ஒழுக்கு காரண மாகவே அந்த இயந்திரம் செயலிழந்துள்ளது. இதனை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கு சுமார் மூன்று நாள்கள் தேவைப்படலாம்.

எனினும், எந்தக்காரணம் கொண்டும் மின் விநியோகத்தில் தடை ஏற்படாது. மின் கட்டணமும் அதிகரிக்கப்பட மாட்டாது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் மூன்று இயந்திரங்கள் காணப்படுகின்றன.-என்றார். (எ)

# இந்துசமய பாடத்திட்ட குறைபாடுகளை களைவதற்கு புதிய நிபுணத்துவக் குழு!

## கல்வி அமைச்சு நடவடிக்கை



கொழும்பு, ஏப்.20

இந்து சமய பாடப் புத்தகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட உள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள், தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்கள பாட விடயங்களுக்குப் பொறுப்பானமேலதிகாரிகள், பல்கலைக்கழக நிபுணர்கள், மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர்கள் அடங்கிய குழு ஒன்றே நிறுவப்பட உள்ளது.

இந்து சமய பாடநெறி மற்றும் பாடத்திட்டம் தொடர்பாக உரிய முறையில் கவனம் செலுத்தாமையால் பாடத்திட்டத்தில் நிலவுகின்ற பல்வேறு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இதன் காரணமாக, மாணவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

எனவே, பாடத்திட்டத்தில் சுட்டிக்காட்டப்படுகின்ற விடயங்களை மாணவர்கள் ஆராய்ந்து, அவற்றை விரும்பிக் கற்கும் விதத்தில் பாடப்புத்தகத்தில் மாற்றங்களை செய்வதற்காக இந்த நிபுணத்துவக் குழு உருவாக்கப்படவுள்ளது.

இந்துசமயபாடத்திட்டத்தில் தரம் ஒன்று முதல் 11 வரையான வகுப்பு மாணவர்களின் தகுதிக்கு அப்பாற்பட்ட பாடவிதானங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன என்று நிபுணத்துவம் பெற்ற பலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலைமை தொடருமானால் மாணவர்கள் எதிர்காலத்தில் இந்து சமயம் தொடர்பானகற்கைக்கு முக்கியத்துவம் வழங்க மாட்டார்கள். அவர்களுக்கு இந்தப் பாடத்திட்டம் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டு விடும். எனவே, அதற்கு இடமளிக்க முடியாது.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் டக்ளஸ் தேவானந்தாவும் கருத்து தெரிவித்துள்ளார். எனவே, இதற்கான ஒரு முறையான ஏற்பாட்டை மேற்கொள்ளும் வகையில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதன்போது பல்வேறு கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

எனவே, இந்து சமய பாட புத்தகத்தில் காணப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றமையோடு, எதிர்காலத்தில் இந்த நிபுணத்துவக்குழுவின் பரிந்துரைக்கு அமையவே பாடத்திட்டம், பாடப் புத்தக வெளியீடு அனைத்தும் இடம்பெற உள்ளன.- என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 20.04.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 7 ஆம் நாள் நவமித்திதி பி.இ. 4.55 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: திருவோணம் பி.இ. 1.51 மணி வரை. பின்னர் அவிட்டம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 1.42 மணி முதல் 3.14 மணி வரை. சுபநேரம்: காலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை. இன்று நடேசரபிஷேகம். திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத தேய்பிறை நவமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவோணம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வீழ்ச்சியடையும். தொழிலாளர்களுக்கு முதலாளிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பயணங்களைத் தவிர்த்தல் நன்று.

**ரிஷபம்:** இன்பமான நாள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணைகளும், பதவி உயர்ச்சியும் கிடைக்கும்.

**மிதுனம்:** குழப்பமான நாள். மன அமைதி குன்றும். வருமானத்திலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்குத் தொழில் பாதிப்படையும்.

**கடகம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மிஞ்சிய செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**சிம்மம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவிகள், பாராட்டுகள் கிடைக்கும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். சிலருக்கு வெளிநாட்டு உறவினரிடமிருந்து விலையுயர்ந்த பொருள்கள் பரிசாகக் கிடைக்கும்.

**துலாம்:** அலைச்சல் மிகுந்த நாள். சிலர் கொடுத்த பணத்தை மீளப்பெற அலைந்து திரிவார்கள். சிலர் உடல் நலக்குறைவால் வைத்திய உதவியை நாடுவார்கள்.

**விருச்சிகம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. அநாவசியச் செலவுகள் உண்டாகும். வியாபாரிகளுக்கு மத்திம முன்னேற்றம் காணப்படும்.

**தனுசு:** இன்பமான நாள். வருமானம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் அமைதியும், நல்லுறவும் வளரும். தொழிலாளர்களுக்கு வருமானம் கூடுவதால் வாழ்க்கைத் தரம் உயரும்.

**மகரம்:** நன்மையான நாள். வங்கிகள், அரசாங்க உதவிகள் கிடைக்கும். பிரிந்திருந்த சகோதரர் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**கும்பம்:** கவலையான நாள். எந்த விசயத்திலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுவார்கள். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும்.

**மீனம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். இதுவரை காலமும் நோயால் அவதிப்பட்டவர்கள் ஆரோக்கியமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இன்று நற்கருமங்களில் ஈடுபாடு கொள்வதைத் தவிர்க்கவும்.

# தகவல்களை அழிக்கும் வைரஸ்: பாவனையாளர்களுக்கு எச்சரிக்கை

## கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு தகவல்

மின்னஞ்சல் மூலம் தற்போது கணினி வைரஸ் ஒன்று இணையத்தளங்களில் வேகமாகப் பரவிவருவதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

தங்களுக்கு வரும் சந்தேகத் துக்குரிய மின்னஞ்சல்களைத் திறக்காமல் இருப்பதே இந்த வைரஸில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கை என்று அந்தப் பிரிவின் பிரதான தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்தா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வைரஸ் Ransomware வைரஸ் என்று அடையாளப் படுத்தப்படுகின்ற நிலையில் உங்களுக்குக் கிடைக்கும் மின்னஞ்சல் இணைப்பைத் திறக்கும் போது உங்கள் கணினி வைரஸ் தாக்குதலுக்குள்ளாகக் கூடும்.

ஓடியோ கோப்புகள், செய்தி காணொலிகள் போன்ற இணைப்புகளாகக் கிடைக்கும் இந்தப் போலி மின்னஞ்சல்கள் சில சந்தர்ப்பங்களில் இந்த வைரஸாக இருக்கலாம்.

கணினியில் இந்த வைரஸ் தாக்கினால் கணினியில் உள்ள அனைத்து ஆவணத் தகவல் களின் தரவுகள், புகைப்படங்கள், மின்னஞ்சல்கள் ஆகியவைகள் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்படும்.

எனவே, உங்கள் கணினிகளில் உள்ள ஆவணத் தகவல்களின் தரவுகள், புகைப்படங்கள் மற்றும் ஏனையவைகளை இன்னும் ஓர் இடத்தில் கோப்பு பிரதி எடுத்து வைப்பது பாதுகாப்பானதாக இருக்கும். கணினியில் உள்ள வைரஸ் காட்டைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டே இருப்பது நல்லது.

தற்போது வரையில் கணினி வைரஸ் தாக்குதலுக்குள்ளாகியுள்ளமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

www.cert.gov.lk இணையத் தளத்தின் ஊடாக இது தொடர் பில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.-என்றார்.

# ஆலயத் திருவிழாவில் கத்திக் குத்து: ஹற்றனில் ஒருவர் சாவு; 4 பேர் காயம்!

ஹற்றன், ஏப்.20

ஹற்றன், குடாஓயா தோட்டத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆலயத் திருவிழாவின் போது இடம்பெற்ற குழு மோதலில் ஒருவர் கத்திகுத்துக்கு இலக்காகி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கு இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தவர், அந்தப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.



இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குடாஓயா தோட்டத்தில் இடம்பெற்ற ஆலயத்திருவிழாவின் இறுதி நாளான நேற்று முன்தினம் மஞ்சள் நீராட்டு விழா இடம் பெற்றது.

இதன் போது இருகுழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் படுகாய மடைந்த நால்வரும் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, மேலும் ஒருவரைத் தாம் தேடி வருகின்றனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# நிலத்தை மீட்பதற்கு அவலப்படும் மக்கள்...!

இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்தம் நிறைவு பெற்று எட்டு ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது பெரும்பாலான மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுகின்றனர்; தமது வாழ்விடங்களையும் மீளக்கட்டியெழுப்பி வருகின்றனர்.

'எமது அயலிலேயே எங்களது வீடு தான் மிகப் பெரிய வீடாகக் காணப்பட்டது' என்று தற்போது கிளிநொச்சியில் இடிந்த நிலையில் காணப்படும் தமது வீட்டின் தளத்தில் நின்றவாறு ஆர்.கந்தசாமி மற்றும் கே.சிவமலர் ஆகியோர் தெரிவித்தனர்.

இந்த வீட்டின் அடிப்பகுதி மட்டுமே இடிபாடுகளிலிருந்து தப்பிக் காணப்படுகிறது. இந்த வீட்டின் சுவர்கள் எங்கிருந்தன என்பதை அடையாளங் காண முடியவில்லை. கிளிநொச்சியில் இவர்களது தோட்டம் மட்டுமே தற்போது வெறுமையாகக் காணப்படுகிறது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைநகராகக் காணப்பட்ட கிளிநொச்சியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அங்கிருந்த பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்டன.

'எமது வளவில் மாமரம் மட்டுமே எஞ்சியுள்ளது. நாங்கள் எமது வீட்டை விட்டு இடம்பெயர்ந்தபோது இந்த மரம் மிகச் சிறியதாகக் காணப்பட்டது. அதாவது மூன்று மாம்பழங்கள் மட்டுமே பழுத்திருந்தன. தற்போது இந்த மரம் மிகப் பெரிதாக வளர்ந்து விட்டது' என கே.சிவமலர் தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இரண்டு பத்தாண்டுகளாக இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்த இந்தத் தம்பதியினர் தற்போது தமது சொந்த இடத்துக்குத் திரும்பியுள்ளனர். ஆர். கந்தசாமி ஒரு நீரிழிவு நோயாளியாவார். இவரால் இந்தியாவில் தனக்கான மருத்துவச் செலவை ஈடு செய்ய முடியவில்லை. இந்தியாவில் அகதிகளாக வாழ்வோருக்கு அடிப்படை மருத்துவப் பராமரிப்பு மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தியாவின் தெற்கு மாநிலமான தமிழ்நாடானது இலங்கையின் வடக்கில் வாழும் தமிழ் மக்களுடன் மொழி மற்றும் கலாசாரத் தொடர்பைப் பேணி வருகிறது. தற்போதும் தமிழ்நாட்டில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் வாழ்கின்றனர்.

'இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் வாழ்ந்த 8ஆயிரம் பேர் தமது சொந்த நாடான இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். பலர் தற்போதும் இலங்கையில் இடம்பெறும் அசாதாரண சூழல் காரணமாக அங்கு திரும்பிச் செல்வதில் தயக்கம் கொள்கின்றனர்' என்று இந்தியா மற்றும் இலங்கையில் வாழும் அகதிகளுக்கு ஆதரவளிக்கும் நிறுவனமான OfERR நிறுவனத்தைச் சேர்ந்த ஏ.சுதர்சன் தெரிவித்தார்.

### யுத்தம் பற்றிய ஐ.நாவின் மதிப்பீடு

யுத்தம் இலங்கையின் வடக்கின் பெரும் பகுதியை அழித்துள்ளது. குறிப்பாக 2009 இல் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தம் பெரும் அழிவுக்குக் காரணமாக உள்ளது. அப்போதைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புலிகள் அமைப்புக்கு எதிராக யுத்தம் மேற்கொள்ளப்பட்ட போது புலிகளின் யுத்த வலயத்தில் அகப்பட்ட பொது மக்கள் பல அழிவுகளைச் சந்தித்தனர். போர் வலயத்தில் இருந்து மக்கள் தப்பிச் செல்வதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை. இதனால் இந்த மக்கள் செறிவான எறிகணைத் தாக்குதல்களால் இலக்கு வைக்கப்பட்டனர். இந்த யுத்தத்தில் 40ஆயிரம் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டது.

யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த போதிலும் யுத்த வடுக்களை இலங்கையால் ஆற்றுப்படுத்த முடியவில்லை. 2015 இல் இலங்கையில் புதிய அரசு தெரிவு செய்யப்பட்ட போது, யுத்த மீறல்கள் தொடர்பில் நீதி வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால், இந்த மீறல்கள் தொடர்பில் நீதியை எட்டுவதில் அதிபர் மைத்திரிபால சிறிசேன தாமதம் காண்பிக்கிறார் என ஐக்கிய நாடுகள் சபையால் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

'யுத்த மீறல்கள் தொடர்பில் தீவிர நடவடிக்கை எடுத்தால் ராஜபக்ஷவின் ஆட்சி மீளவும் நிலைபெறலாம் என்று மைத்திரிபால சிறிசேன அரசு அச்சம் கொள்கிறது. அரசின் கைகள் கட்டப்பட்டால் அதில் எவ்வித பயனுமில்லை' என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர் மரிசா டா சில்வா தெரிவித்தார். போரின் போது வீடுகளை இழந்த மக்கள் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கின்றனர். இதுவரை 50 ஆயிரம் வீடுகள் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால், யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் வாழ்வோரில் ஒரு லட்சத்து 37 ஆயிரம் குடும்பங்கள் வீடற்றவர்களாக உள்ளனர். தமது வீடுகளை மீள நிர்மாணிப்பதில் இந்த மக்கள் பெரும் இடர்ப்படுகின்றனர்.

### வடக்கிலிருந்து முஸ்லிம் வெளியேற்றம்

'எமது அயலை நாங்கள் 'குட்டிச் சிங்கப்பூர்' என்றே கூறுவோம். எமது அயலில் நாம் மிகுந்த செல்வச் செழிப்புடன்

> **'மக்கள் தமது சொந்த இடத்தில் வாழ்ந்த போது மிகவும் செல்வச் செழிப்போடு வாழ்ந்தனர். ஆனால், இவர்கள் இடம்பெயர்ந்த பின்னர் வாழ்வதற்கு மிகவும் துன்பப்படுகின்றனர்.'**

வாழ்ந்தோம். எமது வாழ்வு சிறப்பாக அமைந்திருந்தது. அகதி வாழ்வு ஆரம்பிக்கப்படும் வரை நாம் சிறப்பான வாழ்வை வாழ்ந்தோம்' என ஆர்.கந்தசாமி தெரிவித்தார்.

### பெரிய பிரச்சினையாக நில மீட்பு உள்ளது

'நிலத்தை மீளப் பெறுவதென்பது பெரிய பிரச்சினையாக உள்ளது' என பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர் ஜன்சிலா மஜீட் தெரிவித்தார். 'நிறைய மக்களிடம் ஆவணங்கள் காணப்படவில்லை. ஏனெனில் அவர்கள் தமது நில ஆவணங்களை இடப்பெயர்வின் போது தொலைத்திருந்தனர். ஆனால், முஸ்லிம்கள் மற்றும் தமிழ் சமூகங்களிடையே புதிய தொடர்பை உருவாக்கவே நாங்கள் விரும்புகிறோம்' என ஜன்சிலா மஜீட் தெரிவித்தார்.

2015 இல் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய கபூர் மற்றும் அவருடைய பெற்றோர்கள் தமது வீட்டின் உடபகுதியைத் திருத்தியுள்ளனர். இவர்கள் வாழும் வீதியிலுள்ள பல வீடுகள் இன்றும் யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து காணப்படுகின்றன. யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. ஆனால், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த 2 ஆயிரத்து 500 முஸ்லிம் குடும்பங்களில் 500 குடும்பங்கள் மட்டுமே மீளவும் யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ளன.



'இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் மக்கள் புதிய வாழ்வை அமைத்துள்ளனர். புதிய தலைமுறையினர் தமது பெற்றோர்களின் சொந்த இடத்துக்குத் திரும்பி வர விரும்பவில்லை' என்று வடக்கில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்காகப் பணியாற்றிய இடா சுகன்யா ஜேசு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் பிறிதொரு பகுதியான சுன்னாகத்தில் வாழ்ந்து வரும் வி.பத்மாவதியும் தனது சொந்தக் கதையைப் பகிர்ந்து கொண்டார். இவரது குடும்பம் 1990 இல் இடம்பெயர்ந்தது. இதனால் இவர் வாழ்ந்த வீடும் ஏனைய வீடுகளைப் போல இலங்கை இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

'27 ஆண்டுகளாக நாங்கள் எமது சொந்த நிலத்தைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இராணுவத்தினர் எமது வீட்டைப் பயன்படுத்துகின்றனர். எமது நிலம் பயிர் செய்வதற்குச் சிறந்த நிலமாகும். நாங்கள் இங்கு திரும்பிச் சென்றாலும் கூட அங்கு வாழ்கின்றமை சிரமமானது. ஏனெனில் எமது நிலம் சிறியது. ஆனால் எமது குடும்பம் விரிவடைந்து விட்டது. நாங்கள் எமது சொந்த இடத்தை விட்டு வெளியேறிய போது எனது மூத்த மகனுக்கு 12 வயதாக இருந்தது. ஆனால், தற்போது அவனுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்' என பத்மாவதி தெரிவித்தார்.

பத்மாவதியின் தற்போதைய வீடு இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் உள்ளது. இந்த முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு இடையிலான பாதை மிகக் குறுகியதாகக் காணப்படுகிறது. இந்த முகாமுக்குள் பிரவேசித்த போது சலவைத் தூள் மற்றும் எண்ணெயில் பொரிக்கப்படும் மிளகாய் போன்றவற்றின் வாசனைகள் காற்றுடன் கலந்திருந்தன. இந்த முகாமைச் சேர்ந்த சிறுவர்களால் அமைக்கப்பட்ட அழகான பட்டம் ஒன்று வானத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. அந்த முகாமில் வாழும் அனைத்து மக்களும் மயிலிட்டி என்ற இடத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களாவர்.

'இந்த மக்கள் தமது சொந்த இடத்தில் வாழ்ந்த போது மிகவும் செல்வச் செழிப்போடு வாழ்ந்தனர். ஆனால், இவர்கள் இடம்பெயர்ந்த பின்னர் வாழ்வதற்கு மிகவும் துன்பப்படுகின்றனர். நிலத்துக்கும் வாழ்வாதாரத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது' என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆய்வாளரான நியந்தினி கதிர்காமர் தெரிவித்தார்.

### நில மீட்பு போராட்டங்களும் காணி விடுவிப்புகளும்

கேப்பாபிலவைச் சேர்ந்த மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி கடந்த பெப்ரவரி மாதம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து இலங்கை அரசு போரின் பின்னர் வழங்கிய தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனக்கோரி பரவலான ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இங்கையின் புதிய அரசு தனது கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் ஒரு பகுதி நிலத்தை விடுவித்துள்ளது. ஆனாலும், 12 ஆயிரத்து 750 ஏக்கர் நிலங்கள் இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மக்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து சில நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால், கேப்பாபிலவு மற்றும் மயிலிட்டி போன்ற இடங்களில் பெருமளவான நிலங்கள் விடுவிக்கப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இராணுவ மயமாக்கல் என்பது இலங்கையில் மிகப் பெரியதொரு பிரச்சினையாக உள்ளது. இதனால் இந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான நல்லிணக்கத்தை உருவாக்குவதில் இடர்கள் ஏற்பட்டுள்ளன. சித்திரவதை என்பது தொடர்ந்தும் 'பொதுவான பிரச்சினையாகக்' காணப்படுகிறது. பாதுகாப்புப் படையினரால் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்கள் இன்னமும் விசாரிக்கப்படவில்லை. வடக்கில் தொடர்ந்தும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் தங்கியுள்ளனர். இராணுவத்தினர் அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் தமிழர்கள் எவரும் இல்லை.

> ‘நிலத்தை மீளப் பெறுவதென்பது பெரிய பிரச்சினையாக உள்ளது' என பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர் ஜன்சிலா மஜீட் தெரிவித்தார். 'நிறைய மக்களிடம் ஆவணங்கள் காணப்படவில்லை. ஏனெனில் அவர்கள் தமது நில ஆவணங்களை இடப்பெயர்வின் போது தொலைத்திருந்தனர். ஆனால், முஸ்லிம்கள் மற்றும் தமிழ் சமூகங்களிடையே புதிய தொடர்பை உருவாக்கவே நாங்கள் விரும்புகிறோம்.’

### மக்களின் நிலங்களில் உல்லாச விடுதிகள்

பொது மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருப்பதோடு மட்டுமல்லாது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தால் தற்போது விடுதிகள், உணவகங்கள் மற்றும் சுற்றுலாமையங்கள் நடத்தப்படுகின்றன. இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் அதாவது முல்லைத்தீவுக் காட்டுக்குள் புலிகள் பயிற்சி பெற்ற நீச்சல் தடாகம் ஒன்று காணப்படுகிறது. தற்போது இந்தப் பகுதி இலங்கை இராணுவத்தால் சுற்றுலா மையமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு தற்போது சிறிய உணவகமும் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன.

'தென் ஆசியாவில் அதி தீவிரமாக இராணுவ மயமாக்கப்பட்ட நாடாக இலங்கை காணப்படுகிறது. அதாவது பத்து பொது மக்களுக்கு ஓர் இராணுவத்தினர் என்ற விகிதாசாரத்தில் இராணுவத்தினர் உள்ளனர். ஆகவே, இவ்வாறான நிலைமை யுத்த மன நிலையில் இருந்து அமைதி நிலைக்குக் கொண்டு செல்வதற்குத் தடையாக உள்ளது' என்று உளவியல் நிபுணரும் இலங்கையில் நல்லிணக்கத்தை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட செயலணியில் அங்கம் வகிப்பவருமான தயா சோம சுந்தரம் தெரிவித்தார்.

### வடக்கில் நல்லிணக்கபுரம்

வடக்குக் கரையோரத்துக்கு அருகிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையில் உள்ள திறந்தவெளியில் இலங்கை இராணுவத்தால் வீடுகள் கட்டபபடுகின்றன. இது 'நல்லிணக்கபுரம்' அல்லது 'நல்லிணக்ககிராமம்' என அழைக்கப்படுகிறது. இந்த வீட்டின் உட்பகுதியில் ஜனாதிபதி சிறிசேனவின் ஒளிப்படம் காணப்படுகிறது. 'பச்சை உடையிலுள்ளவர்கள் எப்போதும் நண்பர்களாவர்'என இராணுவ வீரர் ஒருவர் கூறும் வார்த்தையும் இங்கு காணப்படுகிறது.

'எம்மைப் பொறுத்தளவில் எமக்கென வீடொன்று இருப்பது நல்லது. ஏனெனில் நாங்கள் 25 ஆண்டுகளுக்கு மேல் முகாமிலேயே வாழ்ந்துள்ளோம். ஆனால், இங்கு வேலை வாய்ப்பில்லை. சந்தையில் மீன் வாங்கி அவற்றை மக்களுக்கு விற்பதற்காக நான் நாள்தோறும் ஈருருளியில் சந்தைக்குச் சென்று வருகிறேன்' என யுத்தத்தின் முன்னர் மயிலிட்டியில் வாழ்ந்த ஆர்.டனிஸ்ரன் மேலும் தெரிவித்தார்.

'நாங்கள் மீண்டும் எமது சொந்த இடத்துக்குச் செல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை. இதற்குப் பதிலாக நாங்கள் எமது வாழ்வை இங்கேயே வாழவேண்டியேற்படும்' என டனிஸ்ரன் தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் - Je-n-ny Gus-ta-fss-on (லெபனானின் தலைநகர் பெய்ரூட்டை தளமாக கொண்ட ஊடகவியலாளர்)
மொழிபாக்கம் - நித்தியபாரதி




பொன்.வேணு கிருஷ்ணா

**''சிரியர்கள் மீதான இரசாயன தாக்குதல் உலகின் சீற்றத்தைத் தூண்டியது'', - நியூயோர்க் டைம்ஸ்**

எப்போதும் போல, அதை முன்னெடுப்பதில் நியூ யோர்க் டைம்ஸ் முன்னணியில் இருந்தது, ''சிரியர்கள் மீதான இரசாயனதாக்குதல் உலகின் சீற்றத்தைத் தூண்டியது,'' என்ற தலைப்பை அது தாங்கி வந்தது. உளவுத்துறை முகமைகள், அரசு அதிகாரிகள் மற்றும் அவர்களின் ஊடக ஊடுருவிகளின் உலகத்துக்கு வெளியே, அதுபோன்ற ''சீற்றத்துக்கு'' அங்கே என்ன ஆதாரம் இருக்கிறது என்பது தெளிவாக இல்லை. அவ்விடயத்தில், இந்த ''சீற்றத்தின்'' தேர்ந்தெடுக்கப்பட்ட குணாம்சத்திற்கான எந்தவொரு விளக்கமும் அங்கே இருக்கவில்லை.

இந்த தார்மீக கொந்தளிப்பானது, ஒரே நாளில் 1,000 நிராயுதபாணிகளான ஆர்ப்பாட்டக்காரர்களை கொன்று குவித்த கெய்ரோ கொலைகாரர் ஜெனரல் அப்தெல் பதாஹ் எல்-சிசி க்கு ட்ரம்ப் சிவப்பு கம்பள மரியாதை அளித்து வரவேற்ற அடுத்த நாள் வந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்விடயத்தில், கடந்த மாதம் மொசூலில் ஒரேயொரு அமெரிக்க குண்டுவீச்சு தாக்குதலில் 200இற்கும் அதிகமான ஈராக்கிய அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது மீதோ அல்லது யேமனைக் கூட விட்டுவிடுவோம், சிரியாவிலேயே கூட பள்ளிக்கூடங்கள், மசூதிகள் மற்றும் வீடுகள் மீது வீசப்பட்ட அமெரிக்க குண்டுகள் மற்றும் ஏவுகணைகளில் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இல்லையென்றாலும் நூற்றுக் கணக்கானவர்கள் எரிந்து சாம்பலானது குறித்தோ டைம்ஸ் அதுபோன்ற எந்த ''சீற்றத்திலும்'' அக்கறை காட்டவில்லை.

அமெரிக்க உளவுத்துறை உடனான நேரடி கூட்டுறவின் விளைபொருளாக அவற்றை முத்திரை குத்தும் கட்டுரைகளில் ஒருசில மூலவரிகள் தென்படுகின்றன. இவ்விடயத்தில், Anne Barnard இருந்தார், இவர் சிரியாவில் அமெரிக்கா முடுக்கிவிட்ட ஆட்சி மாற்றத்திற்கான போரின் ஒட்டுமொத்த போக்கிலும் அதுபோன்ற சேவைகளை வழங்கியவராவார். அவர் வேலைக்கு தோமஸ் ப்ரீட்மனின் வேலைகள் துணை நிற்கின்றன, இவர் ஒரு கால் நூற்றாண்டு போக்கில் ஒவ்வொரு அமெரிக்க ஏகாதிபத்திய தலையீட்டையும் ஆதரித்துள்ளார். இவர் ''சிரியாவைப் பிரிக்க'' மற்றும் அமெரிக்க இராணுவம் நடைமுறைப்படுத்தும் ''பாதுகாக்கப்பட்ட'' பிரதேசத்தை உருவாக்க பணிவடக்கத்தோடு முன்மொழிகிறார். இது சுலபமாகவோ அல்லது அருமையாகவோ இருக்காது, என்று கூறும் அவர், பனிப்போர் காலத்தில் ஐரோப்பாவில் அமெரிக்கா 4 இலட்சம் துருப்புகளைக் கொண்டிருந்தது என்பதை மறுநம்பிக்கை அளிக்கும் வகையில் கூறுகிறார்.

சிரியா சம்பவங்கள் குறித்த ஊடக பிரசார நடவடிக்கையில் அதிர்ச்சியூட்டும் வகையில் ஒரேமாதிரியாக இருப்பது என்னவென்றால் எல்லாதரப்பிலிருந்தும் குற்றஞ்சாட்டப்படும் இந்த இரசாயன தாக்குதலில், சம அளவில் குற்றகரமாக ஈரான் மற்றும் ரஷ்யா மீது குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது என்பது தான். இந்த தாக்குதல் அசாத்தின் ''அவருக்கு உதவுபவர்களின், குறிப்பாக ரஷ்யா மற்றும் ஈரானின் துர்மார்க்கத்தை'' எடுத்துரைக்கிறது என்று டைம்ஸ் தலையங்கம் குற்றஞ்சாட்டுகிறது.


**''அசாத் மற்றும் அவருக்கு உதவும் ஈரானிய மற்றும் ரஷ்ய உதவியாளர்களோடு நிற்க வேண்டுமா வேண்டாமா என்பது இப்போது ட்ரம்ப் தான் முடிவெடுக்க வேண்டும்,'' - வாஷிங்டன் போஸ்ட்**


வாஷிங்டன் போஸ்ட் தலையங்கம் ஒன்று வலியுறுத்துகையில், திரு. அசாத் மற்றும் அவருக்கு உதவும் ஈரானிய மற்றும் ரஷ்ய உதவியாளர்களோடு நிற்க வேண்டுமா வேண்டாமா என்பது இப்போது திரு. ட்ரம்ப் தான் முடிவெடுக்க வேண்டும், என்கிறது. நோக்கம் தெளிவாக உள்ளது. சிரியாவில் நடந்த இந்த புதிரான சம்பவங்கள், அமெரிக்க ஆளும் ஸ்தாபகத்திற்குள் வெளியுறவு கொள்கை மீது நடந்துவரும் கடுமையான உள்விவாதங்களை மாற்றுவதற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளப்பட

எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். மத்திய கிழக்கில் ஒரு புதுப்பிக்கப்பட்ட இரத்த ஆற்றுக்குள் மூழ்கடிக்கப்படும் ஆபத்தை மட்டும் தொழிலாள வர்க்கம் முகங்கொடுக்கவில்லை, மாறாக உலகின் இரண்டு பிரதான அணுசக்திகள் சம்பந்தப்பட்ட இன்னும் அதிக அபாயகரமான மோதலுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அமெரிக்காவில் இருந்து வருகின்ற வம்பிழுப்பான வசனங்கள் தெளிவாக்குவதைப் போல, 'இராணுவத் தெரிவு' மேசை மேல் இருக்கவே செய்கிறது. அதேபோல சிரியா மட்டுமே இராணுவத் தாக்குதலுக்கான ஒரே இலக்கும் அல்ல. சிரியாவுக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கைகள் ஈரானுடனான ஒரு மோதலுக்குக் களம் அமைக்கும். இன்னும் முன்னே சென்று பார்த்தால், உலக மேலாதிக்கத்திற்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முனைப்பின் தர்க்கமானது ரஷ்யா மற்றும் சீனாவுடன் ஒரு மோதலுக்கு இட்டுச் செல்கிறது. பெரும் ஏகாதிபத்திய சக்திகளது -உதாரணமாக அமெரிக்கா மற்றும் ஜேர்மனி- நலன்களின் இடையிலான மோதல்கள் சில குறிப்பிட்ட நிலைமைகளில் ஆயுத மோதலாக உருமாறக் கூடிய சாத்தியத்தையும் விலக்கி வைத்து விட முடியாது. இந்த எச்சரிக்கை ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

பென்டகன் மற்றும் மத்திய உளவு முகமையின் மிக சக்தி வாய்ந்த கன்னைகளின் ஆதரவுடன், சிரியாவுக்கு எதிரான போருக்கும் ரஷ்யாவுக்கு எதிராய் தீவிரப்பட்ட மோதலுக்குமான ஜனநாயகக் கட்சியின் கோரிக்கை நடந்தேறியிருக்கிறது



இருக்கின்றன. ஈரான் மற்றும் ரஷ்யா இரண்டினோடும் இராணுவ மோதலுக்கு தடையின்றி ஆயத்தப்படுத்துவதற்கு அழுத்தமளித்து வரும் அமெரிக்க இராணுவ மற்றும் உளவுத்துறை எந்திரத்திற்குள் மேலோங்கிய போக்குடன் ட்ரம்ப் நிர்வாகத்தைப் பொருந்தி இருக்குமாறு செய்வதே உத்தேசமாகும்.

இத்தகைய முயற்சிகள் அவற்றின் விரும்பத்தக்க விளைவைக் கொண்டு வந்துள்ளன, இவற்றை சிரியா குறித்த ட்ரம்பின் கருத்துக்களில் மட்டுமல்ல, மாறாக ட்ரம்பின் பாசிசவாத தலைமை மூலோபாயவாதி ஸ்டீபன்பானன் தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் முக்கியஸ்தர்கள் குழுவிலிருந்து நீக்கப்பட்டிருப்பதிலும் புதனன்று உறுதியான வெளிப்பாட்டைக் கண்டது. ட்ரம்பின் ''அமெரிக்காவே முதலில்'' வலதுசாரி தேசியவாத வீராவேசத்தின் சித்தாந்த கட்டமைப்பாளரை வெளியேற்றி இருப்பது, பென்டகனுக்காக பேசும் கடமை தவறாத அதிகாரியும் ஜனாதிபதியின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான தளபதி எச். ஆர். மெக்மாஸ்டர் ஆல் கட்டளையிடப்பட்டதாக செய்திகள் குறிப்பிட்டன. உள்நாட்டில் கட்டுக்கடங்கா சமூக மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் ட்ரம்ப், அவருக்கு முன்னர் பதவியில் இருந்தவரைப் போலவே, வெளிநாடுகள் மீதான போரை நோக்கி திருப்புவதாக தெரிகிறது. சிரியாவில் சி.ஐ.ஏ .ஆத்திரமூட்டல் மற்றும் அதனுடன் சேர்ந்த ஊடக பிரசார நடவடிக்கைகளோடு சேர்ந்து, இத்தகைய அபிவிருத்திகளை அமெரிக்க மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கம் ஒரு மரணகதியிலான தீவிர

### சிரியா மீதான அமெரிக்க ஏவுகணை வீச்சு

சிரியா மீதான கப்பல்தள ஏவுகணைத் தாக்குதலை அடுத்து, கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்திற்கு முன்பாய் ஈராக்கின் ஆக்கிரமிப்புடன் அமெரிக்கா தொடங்கியிருந்த உலக மேலாதிக்கத்திற்கான அதன் போரில் அது ஒரு புதிய அத்தியாயத்தை திறந்திருக்கிறது.

இந்தத் தாக்குதல் சிரிய அரசாங்கம் நச்சு வாயுவைப் பயன்படுத்தியதற்கான ஒரு பதிலிறுப்பு என்பதான கூற்று ஒரு அப்பட்டமான பொய் ஆகும். 1999 இல் சேர்பியாவுக்கு எதிரான வான் போரில் போல, 2001 இல் ஆப்கானிஸ்தான் மற்றும் 2003 இல் ஈராக் மீதான படையெடுப்பு போல, அத்துடன் 2011 இல் லிபியா மீதான தாக்குதல் போல, மறுபடியும், அமெரிக்கா இன்னொரு நாட்டின் இறையாண்மையை மீறுவதை நியாயப்படுத்துவதற்கு ஒருசாக்கினை இட்டுக்கட்டியிருக்கிறது.



மேலும், இந்தத் தாக்குதல்கள், சென்ற நவம்பரின் ஜனாதிபதித் தேர்த லுக்குப் பின்னர் அமெரிக்க அரசின் உயர் அடுக்குகளுக்குள்ளாக கொதித்து வந்திருக்கும் வெளியுறவுக்கொள்கை தொடர்பான கடும் மோதல் குறைந்தபட்சம் பகுதியாகவேனும் தீர்க்கப்




சிரியா மீதான குண்டுவீச்சு, நடைபெற்று வருகின்ற உள்நாட்டுப் போரில் அமெரிக்காவின் நீண்டகால திட்டமிடல் கொண்ட நேரடி இராணுவத் தலையீட்டை திரும்பப் பெறுவதில் விளைந்த 2013 இல் நடந்த ரஷ்யாவுடன் பேசி முடிக்கப்பட்டிருந்த உடன்பாட்டை அமெரிக்கா ஒருதரப்பாக கைவிட்டிருப்பதாகும்.

இடதுசாரி ஆய்வாளர் குழாம் 2013 செப்ரெம்பரில் எச்சரித்ததை போல, போரின் தள்ளிவைப்பு ஒரு பெரிய போர் வெடிப்பதன் சாத்தியத்தை, இன்னும் சொன்னால், தவிர்க்கவியலாத தன்மையை, குறைத்து விடவில்லை.


பட்டிருப்பதை குறிக்கிறது. பென்டகன் மற்றும் மத்திய உளவு முகமையின் மிக சக்திவாய்ந்த கன்னைகளின் ஆதரவுடன், சிரியாவுக்கு எதிரான போருக்கும் ரஷ்யாவுக்கு எதிராய் தீவிரப்பட்ட மோதலுக்குமான ஜனநாயகக் கட்சியின் கோரிக்கை நடந்தேறியிருக்கிறது. ட்ரம்ப்பின் வெள்ளை மாளிகையானது சில நாள்களுக்கு முன்பாக அது பகிரங்கமாக அறிவித்திருந்த ஒரு கொள்கையில் இருந்து ஒரு திடுக்கிடச் செய்யும் தலைகுத்துக்கரண மாற்றத்தை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




121

# தமிழ்த் தேசிய எழுச்சி

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### முல்லைத்தீவுச் சமர்

முல்லைத்தீவுப் பெருந்தளத்தின் வெளிப்புறக் காப்பு வியூகத்தை உடைத் தெறிந்து, தரை வழியாகவும் கடல் வழியாகவும் உட்புகுந்த விடுதலைப் புலிகளின் படையணிகள் ஆங்காங்கே அமையப் பெற்றிருந்த உப - முகாம் களையும் உட்காவலரண்களையும் தாக்கி அழித்தனர். காலை 9:00 மணியளவில் சரியாக எட்டு மணி நேரமாக நிகழ்ந்த பயங்கரச் சண்டையின் பின்பு, பிரதான முகாம் பகுதிக்குள் புயலாக நுழைந்த புலி வீரர்கள் தளத்தின் கட்டளைப் பணிமனை, பீரங்கி, மோட்டார் ஏவு தளங்கள், தொலைத் தொடர்பு நிலையம், போர்த் தளபாடக் களஞ்சியம் ஆகியனவற்றைக் கைப்பற்றினர். முகாமின் மையமாக அமைந்த கட்டடப் பகுதிக்குள் எஞ்சிய சிங்களப் படைகள் முடக்கப்பட்டிருந்தன. அத்துடன், தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், களைப்படைந்த தாக்குதல் அணிகளை மீளமைக்கவும் சிறு கால இடைவெளியை ஏற்படுத்திக் கொடுத்தார் பிரபாகரன்.

படைத்தளத்தினுள் நிகழ்ந்த சண்டை தற்காலிகமாக ஓய்வடைந்த வேளையில் பிற்பகல் இரண்டு மணியளவில், முகாமுக்குத் தென்புறக் கரையோரமாக மூன்று கிலோமீற்றர் தொலைவில் அமையப் பெற்றிருந்த சிலாவத்தைப் பகுதியில், வான் வழி மூலம் மீட்புப் படைகள் தரையிறக்கப்பட்டன. கடற்கரை மணற்பரப்பில் 300 மீற்றர் விட்ட நிலப்பரப்பில் எம்.ஐ.17 ராட்சத உலங்கு வானூர்திகள் மூலம் சிறப்பு அதிரடிப் படையினர் தரையிறக்கப்பட்டனர். ஒரு புதிய போர் முனை திறக்கப்பட்டது. இந்த மீட்புப் போர் நடவடிக்கைக்கு 'திரிவிட பஹர' (மும்முனைத் தாக்குதல்) எனப் பெயரிடப்பட்டது. மீட்புப் படைகள் இறங்கிய பகுதியைச் சூழ்ந்து கொண்ட புலிகளின் படையணிகள், எதிரியை நகரவிடாது முடக்கி வைத்துக் கடும் சண்டையில் ஈடுபட்டன. மீட்புப் படைகள் மீளமுடியாத ஒரு மரணப் பொறிக்குள் சிக்கிக் கொண்டன. தரையிறங்கிய படையினரை இறுக்கமான முற்றுகைக்குள் சிக்க வைத்த பின்னர், அன்றிரவே படைமுகாம் சமர் தீவிரமாக முடுக்கி விடப்பட்டது.

ஜூலை மாதம் 18 ஆம் நாள் நள்ளிரவுடன் முல்லைத்தீவுப் பெருந்தளம் முழுமையாகப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. எனினும், கடல்வழியாலும், வான் வழியாலும் மீட்புப் படைகளைத் தொடர்ந்து அனுப்பி வைக்கும் முயற்சி



களைச் சிறிலங்காவின் படைத்துறைத் தலைமை கைவிடவில்லை. 20, 21, 22, 25 ஆம் நாள்களில், கடல் வழியாகவும் வான் வழியாலும் மீட்புப் படைகளைத் தரையிறக்கும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. தொடர்ச்சியாக நிகழ்ந்த கடற்சமரில், சிறிலங்கா கடற்படையின் இரண்டு பீரங்கிப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. கடற்படைக் கலங்கள் பல சேதமாக்கப்பட்டன. தரை இறங்கிய மீட்புப் படைகளின் கதி படுமோசமாகியது. புலிகளின் போர் அணிகளால் சுற்றி வளைக்கப்பட்டு மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகளால் உக்கிரமான தாக்குதலுக்கு ஆளாகி வந்தமையால் இறக்கப்பட்ட துருப்புகளுக்குப் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது. மீட்புப் படைகளை மீட்டெடுப்பதே, சிங்களப் படைத் தலைமைக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இறுதியாக, ஜூலை மாதம் 26 ஆம் நாளன்று, புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதலுக்கு மத்தியில் மீட்புப் படையணிகள் அவசர அவசரமாக மீட்டெடுக்கப்பட்டன. அத்துடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவுச் சமர் முடிவுக்கு வந்தது. முல்லைத்தீவுச் சமருக்கு 'ஓயாத அலைகள் I' எனப் பெயரிட்டார் பிரபாகரன். இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் பிரதான கட்டளைத் தளபதியாகக் கேணல் பால்ராஜும், தாக்குதல் ஒருங்கிணைப்புத் தளபதியாகக் கேணல் தீபனும் பணியாற்றினர். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மகளிர் படைப் பிரிவு, கடற் புலிகள் அணி ஆகியவற்றுடன் வேறு அணிகளும் இந்தச் சமரில் பங்குபற்றின.

முல்லைத்தீவுச் சமரில் சிறிலங்கா இராணுவம் பெரும் உயிரிழப்பைச் சந்தித்தது. படை முகாம் சண்டையில் 1200 இராணுவத்தினரும், தரையிறக்கப் பகுதியில் 300 பேருமாக, மொத்தம் ஆயிரத்து ஐந்நூறு (1500) படையினர் முல்லைத்தீவுச் சமரில் களப்பலியாகினர். எமது தரப்பில், ஆண்களும் பெண்களுமாக 315 போராளிகள் உயிரிழந்தனர். இந்தச் சமரில், கனரகப் பீரங்கிகள் உட்படப் பெருந்தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இரண்டு 122 எம்.எம். பீரங்கிகள், நான்கு 120 எம்.எம். மோட்டார்கள், 1000 பீரங்கி எறிகணைகள், 1000 சிறுரக இயந்திரத் துப்பாக்கிகள், பல லட்சம் வெடிபொருள்கள் எனப் பெருந்தொகை ஆயுதங்கள் புலிகள் வசமாகின. விடுதலைப் புலிகளிடம் சிக்கிய ஆயுதத் தளபாடங்களின் பெறுமதி இருநூறு கோடி ரூபாவுக்கு அதிகமாகும் என அரச தரப்பு இராணுவ ஆய்வாளர் ஒருவர் மதிப்பீடு செய்தார். முல்லைத்தீவுச் சமரில் சோகமான அம்சம் என்னவென்றால், களத்தில் பலியாகிய சிங்களப் படையினரின் உடல்களைப் பொறுப்பெடுக்கச் சந்திரிகா அரசு மறுத்தமையாகும். இராணுவத்தினரின் உடல்களை ஒப்படைப்பதற்குச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கொண்ட பகீரத முயற்சிகள் பலனளிக்கவில்லை. இறுதியில், அழுகாத நிலையில் இருந்த ஐம்பது உடல்களை மட்டும் வவுனியாவில் வைத்து இராணுவம் பொறுப்பெடுத்தது. அழுகிய நிலையிலிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினரின் உடல்கள், முறிகண்டிக் காட்டுப் புறத்தில் மலையாகக் குவிக்கப்பட்டு, இராணுவ மரியாதை அளிக்கப்பட்ட பின்னர், தகனம் செய்யப்பட்டன.

இரும்புக் கோட்டை போன்ற இறுக்க





மான பாதுகாப்புடைய முல்லைத்தீவுப் பெரும் தளம் ஒரு நாள் சமரில் தாக்கி அழிக்கப்பட்டமை; என்றுமில்லா பெரும் தொகையாக ஆயிரத்து ஐந்நூறு படையினர் கொல்லப்பட்டமை; முதற் தடவையாகக் கனரகப் பீரங்கிகள் விடுதலைப் புலிகளிடம் சிக்கியமை; முல்லைத்தீவுப் பெருநிலப்பரப்பும் கேந்திர முக்கியத்துவமான கடற்பரப்பும் தமிழரிடம் வீழ்ந்தமை ஆகிய இந்தப் பெரும் பின்னடைவுகள் சந்திரிகா அரசுக்கு ஒரு புறம் திகைப்பையும் மறுபுறம் தலைகுனிவையும் ஏற்படுத்தின. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் புலிப் படையின் முதுகெலும்பை முறித்துவிட்டதாகப் பறை சாற்றிப் பெருமிதம் கொண்டாடி வந்த அரசுக்கு, முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் ஈட்டிய மகத்தான இராணுவச் சாதனை பேரிடியாக விழுந்தது. இனப் பிரச்சினையின் தீர்வுக்கு இராணுவ அணுகுமுறையை வலியுறுத்தி நின்ற 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற சந்திரிகாவின் கோட்பாடும் அர்த்தமிழந்து அடிபட்டுப் போனது. முல்லைத்தீவில் சந்தித்த பேரிழப்பால் சிங்கள ஆயுதப் படைகளின் மனவுறுதி ஆட்டம் கண்டது. உயிரிழப்பு விவரங்கள் தெரிய வந்ததும் சிங்கள மக்கள் திகிலடைந்தனர்.


மனமுடைந்த மக்களையும், உறுதி தளர்ந்த படைகளையும் திசை திருப்பித் திருப்திப்படுத்தும் நோக்குடன் சந்திரிகாவின் அரசு, திடீரென, முல்லைத் தீவுச் சமர் முடிவுக்கு வந்த அன்றைய நாளே புதிய போர் முனையைத் திறந்தது. ஜூலை மாதம் 26 ஆம் நாளன்று, தரையிறங்கிய மீட்புப் படைகளை விரட்டியடித்து, முல்லைத்தீவுச் சமருக்கு முடிவுகட்டிவிட்டு, படைமுகாமில் கைப்பற்றிய ஆயுதத் தளபாடங்களை எமது போர் அணிகள் அகற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சிங்கள அரசு, புதிய படை நடவடிக்கையை முடுக்கி விட்டது. ஆனையிறவுப் பெரும் தளத்திலிருந்து மின்னல் வேகத்தில் முன்னேறிய சிங்களப் படையணிகள் ஒரு கிலோமீற்றர் தொலைவிலிருந்த பரந்தன் பகுதியைக் கைப்பற்றின. 'சத் ஜெய' எனப் பெயரிடப்பட்ட இந்தப் படை நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, பரந்தனின் வீழ்ச்சியை அபாரமான இராணுவச் சாதனையாகப் பரப்புரை செய்தது அரசு. பரந்தனைக் கைப்பற்றிய மறுவாரமே, 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நான்காம் நாளன்று 'சத் ஜெய 2' என்ற பெயரில், சிங்கள இராணுவம் கிளிநொச்சி மீது படையெடுப்பை நிகழ்த்தியது. கிளிநொச்சியை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகளின் படையணிகள் மூர்க்கமாகப் போரிட்டன. எமது போராளிகளின் கடும் எதிர்த் தாக்குதல் காரணமாக, இராணுவத்தினரின் தந்திரோபாயக் குறிக்கோள் முழுமையாக நிறைவுபெறவில்லை. கிளிநொச்சி நகரத்தின் ஒரு பகுதியை மட்டுமே இராணுவம் கைப்பற்ற முடிந்தது. முல்லைத்தீவில் எதிர்கொண்ட பேரழிவுக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன், பல நாள்களாகத் தொடர்ந்த கிளிநொச்சிச் சமரின் போது, பீரங்கிகளாலும் விமானங்களாலும் குண்டுமாரி பொழிந்து, கிளிநொச்சி நகரையும் அதன் சுற்றுப்புறங்களையும் சிங்களப் படைகள் தரைமட்டமாக்கின.

முல்லைத்தீவுப் படைமுகாமை இழந்து, கிளிநொச்சியில் முன்னேற முடியாது முடக்கப்பட்டபோதும், சிறிலங்காவின் படைத்துறைத் தலைமை தனது ஆக்கிரமிப்புப் போர்த் திட்டங்களைக் கைவிடப் போவதில்லை என்பது புலிகளுக்கு நன்கு புலனாகியது. 'அமைதிக்கான போர்' என்ற அசட்டுத்தனமான போரியல் தந்திரத்தைச் சந்திரிகாவோ அன்றி போர் வெறி கொண்ட அவரது மாமனாரோ இலகுவில் விட்டுவிடப் போவதில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

(தொடரும்...)




சாவகச்சேரி 523ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் புது வருட தினத்தை முன்னிட்டு அண் மையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் கிடுகு பின்னுதல்,முட்டி உடைத்தல்,கயிறு இழுத் தல் போன்ற போட்டிகள் இடம்பெற்றன. இந் நிகழ்வுகள் 523 ஆவது படைத்தளபதி பிரிகேடியர் திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றன.நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சண்முக தாசன் கலந்து கொண்டார். (ஐ-21)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாணக் கண்காட்சி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வ்டக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராஜா வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான பா.கஜதீபன், இ.ஆனோல்ட் , கே.சயந்தன், அ.பரம் சோதி மற்றும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சத் தியசீலன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-7)




**நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் ஆ. பாலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் கலந்துகொண்டார். (ஐ)**





• சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் மாணவர்களுக்கான கௌரவிப்பும், பரிச ளிப்பு விழாவும் அண்மையில் றாத்தலடி கலைமகள் கலையரங்கில் விளையாட்டுக்கழகத் தலைவர் செல்வன் வ.கோகுலநேசன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித் தார்த்தன் கலந்து கொண்டார். (ஐ)







டாக்டர் அம்பேத்காரின் பிறந்ததின வாரத்தில், பொன் னாலையில் இலவசக் கல்வி நிலையம் ஒன்று ஆரம்பிக் கப்பட்டது. வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் திருவடி நிலை வீதி பொன்னாலையில் உள்ள கட்டடம் ஒன்றில் இந்த வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொன்னாலை கடற்படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் மீளக்குடியேறியுள்ளனர். அவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், மாண வர்களின் கல்வி பெரும் பின்னடைவாக இருந்துவருகின்றது.

இந்த நிலையிலேயே வெண்கரம் அமைப்பு இங்குள்ள மாணவர்களுக்கான கல்விச் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

டாக்டர் அம்பேத்காரின் சிந்தனைகளுக்கு ஈழத்தில் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் இந்தக் கல்விச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## அடுத்துவரும் தேர்தல்களில் தனிச்சின்னத்தில் த.மு.கூ. போட்டி

### அந்தக்கட்சியின் உபதலைவர் தெரிவிப்பு

தமிழ் முற்போக்குக் கூட்டணி அடுத்துவரும் தேர்தல்களில் தனித்துவத்துடன், தனிச்சின்னத்தில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைத் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உபதலைவருமான அ.அரவிந்த குமார் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை முன்னிலைப்படுத்தி தமிழ் முற்போக்குக் கூட்டணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மேதின நிகழ்வு தொடர்பிலான தெளிவுபடுத்தும் கூட்டம், மலையக மக்கள் முன்னணியின் பதுளை பிராந்திய செயல்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

சர்வதேசரீதியிலும்அங்கீகாரத்தைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதுவரை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படவில்லை. அந்தக் கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சி என்ற வகையிலேயே தேர்தலில் போட்டியிடுகிறது. ஆனால், தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்துக்குள் அந்த அமைப்பை அரசியல்கட்சியாகப்பதிவுசெய்யும்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டணியின் மே தின நிகழ்வு, எதிர்வரும் முதலாம் திகதி தலவாக்கலையில் நடத்தப்படவுள்ளது. -என்றார்.

## தொழிலாளர் மீதான உரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரிப்பு

### ஐரோப்பிய ஒன்றியக் குழு விசனம்



கொழும்பு, ஏப்.20

இலங்கையில் தொழிலாளர் உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன என்று ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்குவது குறித்து ஆராய்வதற்காக இந்தக் குழு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

குறிப்பாக சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுசேவைப் பணியாளர்கள் மத்தியில் தொழிலாளர் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

பாலியல் துஷ்பிரயோகங்கள், திடீர் பணிநீக்கம், நெருக்கடி வழங்குதல் உள்ளிட்ட பல உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த விடயங்கள் தொடர்பில் தொழில் உறவு அமைச்சருடன் பேச்சு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு வழங்கப்படும் ஜீ.எஸ். பி.பிளஸ் சலுகை, குறிப்பிட்ட சில வாத்தகர்களுக்கு மாத்திரம் லாபம் தரும் வகையில் அமையக் கூடாது.

அவ்வாறெனின் அந்தச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்காது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தூதுக்குழு, தொழில் அமைச்சு ஜோன் செனவிரத்னவைச் சந்தித்தபோது இலங்கையில் தொழில் உரிமைகள் தொடர்பில் தமது கடுமையான விசனங்களை வெளிப்படுத்தினர். (எ)

## சட்டவிரோதமாக கடத்திவரப்பட்ட ஒருதொகை மதுப்போத்தல்கள் மீட்பு

கொழும்பு, ஏப்.20

சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்பட்ட ஒரு தொகை வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்புக் கடற்படையின் மேற்குப் பிராந்திய படைப்பிரிவு உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, பாணந்துறை மோசடி தடுப்புப் பிரிவு பொலிஸாருடன் இணைந்து கொழும்பு கறுவாத் தோட்டம் பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் 182 மீட்கப்பட்டுள்ளன.

இதனை எடுத்துச் சென்ற கார் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், அதில் இருந்த 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தச் சந்தேகநபர்கள் அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானப் போத்தல்களை எடுத்துச் சென்றிருந்தமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள்கள் என்பன மருதானைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கார் மற்றும் மதுபானப் போத்தல்கள் சகிதம் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மருதானை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

## புதிய சிகரெட் கம்பனி பதிவு: தகவல் உண்மையில்லை

### சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு



இலங்கையில் புதியதொரு சிகரெட் நிறுவனத்தை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது என்று சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த அரசைப் போன்று புகைத்தலைக் கட்டுப்படுத்த அர்ப்பணிக்கும் பிறிதோர் அரசு இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில்லறை விலைக்கு சிகரெட்டை விற்றல் மற்றும் பாடசாலைகள் அமைந்துள்ள இடத்தில் இருந்து 500 மீற்றருக்குள் சிகரெட்டுக்களை விற்பனை செய்தல் போன்றவற்றைத் தடுக்கத் தேவையான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (எ)

## கரதியானவில் குப்பைகளை கொட்டுவதை எதிர்த்து நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஏப்.20

பிலியந்தலை, கரதியான பிரதேசத்தில் கொழும்பு மாநகரின் குப்பைகளைக் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மீதொட்டமுல்ல குப்பை மலை அனர்த்தத்தின் பின்னர் கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை பிலியந்தலை, கரதியான பிரதேசத்தில் கொட்டுவதற்கு கெஸ்பேவ நீதிமன்றம் நேற்று முன்தினம் தற்காலிக அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை முதல் அந்தப்பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்கள் ஒன்றிணைந்து குப்பை லொறிகளை பிரதேசத்தினுள் உள்நுழைய அனுமதிக்காமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சுமார் 400 பேர் வரை அந்தப்பிரதேசத்தில் குழுமி நின்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குப்பை கொட்டும் இடத்துக்குச் செல்லும் பாதை ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றாக மறிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக குப்பைகளை எடுத்துச் சென்ற 8 லொறிகள் மீண்டும் கொழும்பு மாநகர எல்லை நோக்கி திருப்பி விடப்பட்டன.

# தினகரனைக் கைது செய்ய டில்லி பொலிஸ் முஸ்தீபு?

## விமான நிலையங்களுக்கு அறிவித்தல்

புதுடில்லி,ஏப்.20

அ.தி.மு.க. அம்மா கட்சி துணைப்பொதுச் செயலாளர் தினகரன் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லாமல் இருப்பதற்குப் பாதுகாப்பைத்தீவிரப்படுத்த வேண்டும் என டில்லிகுற்றப்பிரிவுபொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர். இதனையடுத்து, கடல்வழியாகவோ, விமானம் மூலமாகவோ தினகரன் தப்பிச் செல்லாமல்இருக்கபொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

இரட்டை இலைச்சின்னத்தை கைப்பற்றத் தேர்தல் ஆணையக அதிகாரிகளுக்குத் தினகரன் பணம் கொடுக்க முயற்சி செய்தமையை உறுதி செய்வதற்கான ஆதாரங்களை டில்லி பொலிஸார் திரட்டி வருகின்றனர். கைதுசெய்யப்பட்டசுகேஷ் சந்திரசேகர் அளித்த தகவலின் அடிப்படையில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டு, கைது நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டு வருகிறது.

இதனால், வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல தினகரன் திட்டமிட்டுள்ளார்என அவருக்குநெருக்கமானவர் மூலம் டில்லி பொலிஸ்தெரிந்து கொண்டுள்ளது. இந்நிலையில், அவர்தப்பிச்செல்லாமல் இருக்கபாதுகாப்பைப்பலப்படுத்தும்படி அனைத்து விமான நிலையங்களுக்கும் டில்லி பொலிஸ் அறிவித்தல் விடுத்துள்ளது. மேலும், தினகரன் எந்த விமான நிலையத்துக்கு வந்தாலும் உடனடியாக தகவல் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தினகரன் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்பதை உறுதிசெய்யும் விதமாகச் சென்னை பொலிஸாரும் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஆயுதப்படைப் பொலிஸாரையும் தயார் நிலையில் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 16 ஆண்டுகளாக தமது கடவுச்சீட்டு நீதிமன்றத்தின் பொறுப்பில் இருக்கும் போது தாம் நாட்டைவிட்டு எப்படித் தப்பிச் செல்ல முடியும் என்று தினகரன் கேள்வியெழுப்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அ.தி.மு.கவில் குழப்பம்: பா.ஜ.க.காரணம் அல்ல!

## மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவிப்பு



அ.தி.மு.க.வில் நிலவும் குழப்ப நிலைக்கு பா.ஜ.க. காரணம் அல்ல என்று மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநில அரசுகளின் உள் விவ காரங்களில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தலையிடுகிறது என எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமைச்சர் வெங்கையா நாயுடுவிடம் செய்தியாளர்கள் கேள்விகளை எழுப்பினர். அதற்கு பதிலளிக்கும்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டில் எங்கு என்ன நடந்தாலும், அதற்கு மத்திய அரசுதான் காரணம் என்று குற்றம் சாட்டுவதை எதிர்க்கட்சிகள் வழக்கமாக கொண்டுள்ளன. சட்ட ஒழுங்கு என்பது மாநில அரசு சம்பந்தப்பட்டது. அங்கு மிக மோசமான நிலை ஏற்படாதவரை மத்திய அரசு தலையிடாது.

தற்போது அ.தி.மு.க.வில் காணப்படும் குழப்பமான நிலைக்கு மத்திய அரசோ, பா.ஜ.கவோ காரணம் அல்ல. எந்த மாநிலத்தின் உள் விவகாரத்திலும் மத்திய அரசு தலையிடுவது இல்லை. எங்களைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் நிலையான அரசு இருக்க வேண்டும் என்பதையே விரும்புகிறோம்.

தமிழக மக்கள் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்காக வாக்களித்தனர். எனவே மக்களின் நலனுக்காக அ.தி.மு.க. தனது கருத்து வேறுபாடுகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ளவேண்டும். -என்றார். (ச)

# சசிகலா குடும்பத்தை ஒதுக்கியமை தர்ம யுத்தத்துக்கு கிடைத்த வெற்றி!

## இரு தரப்பும் பேசி முடிவு எடுப்போம் என்கிறார் ஓ.பி.எஸ்.

சென்னை,ஏப்.20

அ.தி.மு.கவில் இருந்து சசிகலா குடும்பத்தை ஒதுக்கி வைத்தமை, தர்மயுத்தத்துக்குக் கிடைத்த முதல் வெற்றி. தொண்டர்களின் விருப்பத்தை நிறைவேற்ற இரு தரப்பும் பேசி முடிவு எடுப்போம். -இவ்வாறு அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணி சார்பில் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சென்னைக்ரீன்வேஸ் வீதியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.கவை மக்கள் இயக்கமாக எம்.ஜி.ஆர். உருவாக்கினார். எம்.ஜி.ஆர். பாதையில் ஜெயலலிதா வழிநடத்தி வந்தார். அவர்கள் மறைவுக்குப் பின்னர் கட்சியில் பல்வேறு குழப்பங்கள் நிலவின.

தொண்டர்கள் மற்றும் மக்கள் ஆகியோரின் விருப்பத்துக்கு இணங்கவே நாங்கள் தர்மயுத்தம் தொடங்கினோம். அதற்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது. அடுத்து என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பில் விரைவில் தீர்மானிப்போம். எங்கள் தர்ம யுத்தம் தொடரும்.- என்றார். (ச)

# கட்சியில் இருந்து ஒதுங்கத் தயார்!

## தினகரன் நேற்று அதிரடி அறிவிப்பு



சென்னை,ஏப்.20

அ.தி.மு.கவில் பிளவு ஏற்படக்கூடாது என்பதே எனது விருப்பம். நான் கட்சியில் இருந்து ஒதுங்குவதற்குத் தயாராக உள்ளேன். கட்சி நலன் கருதி முதலமைச்சர் எடுக்கும் முடிவை ஆதரிக்கிறேன்.

-இவ்வாறு அ.தி.மு.க. அம்மாஅணியின்துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. அம்மா அணியில் அமைச்சர்கள் அனைவரும் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரனுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளநிலையில், சென்னையில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர்கள் என்னிடம் ஆலோசித்திருந்தால் நானே அறிவித்திருப்பேன். என்னை நீக்கினால்தான் அவர்களுக்கு நன்மை கிடைக்குமென்றால், அந்த நன்மை அவர்களுக்கு கிடைக்கட்டும். கட்சியில் பிளவு ஏற்பட நான் காரணமாக இருக்க மாட்டேன். அமைச்சர்களுடன் எந்த சண்டை சச்சரவையும் நான் விரும்பவில்லை.

கடந்த 14ஆம் திகதி வரை அமைச்சர்கள் என்னை சந்தித்துவந்தனர். அமைச்சர்கள் செங்கோட்டையன், திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் என்னுடன் தொலைபேசியில் பேசினர். திடீரென்று அவர்கள் இப்படி ஒரு முடிவு எடுப்பார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை. சிலருக்கு ஏற்பட்ட அச்சத்தால் என்னை கட்சியிலிருந்து நீக்கப்பார்க்கிறார்கள். அவர்களது அச்சத்துக்கு காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

### துணைப் பொதுச் செயலாளர் பதவி

துணைப்பொதுச்செயலாளர் பதவியை ராஜினாமா செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. இப்பதவியை எனக்கு அளித்தவர் பொதுச்செயலாளர்.

அதனால், பதவியை ராஜினாமா செய்வதற்கில்லை. இது தொடர்பில் சசிகலா முடிவெடுப்பார். எனக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. அதனால் ஏமாற்றமும் இல்லை. இனியும் எனது அரசியல் வாழ்க்கை தொடருமா என்பதை இறைவன் தீர்மானிப்பார்.- என்றார். (ச)

# பாபர் மசூதி இடிப்பு வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவு!


பாபர் மசூதி இடிப்பு தொடர்பான வழக்கில் பா.ஜ.க.வின் மூத்த தலைவரான அத்வானி உள்ளிட்டோர் மீதான குற்றச்சாட்டை மீண்டும் விசாரிக்க மத்திய புலனாய்வுத் துறைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை உச்ச நீதிமன்றத்தில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த வழக்கைத் தொடர்ச்சியாக விசாரித்து 2 வருடங்களுக்குள் நிறைவுசெய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு, பா.ஜ.க. மூத்த தலைவர்களான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் உமா பாரதி உள்ளிட்டோர் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இருந்து ரேபரேலி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். பின்னர் 2010 ஆம் ஆண்டு அலகாபாத் உயர் நீதிமன்றமும் இந்தத் தீர்ப்பை உறுதி செய்தது.

இந்நிலையில், அத்வானி உள்ளிட்டோர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்தும் அவர்கள் மீதான கிரிமினல் சதி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை மீண்டும் விசாரிக்க அனுமதி கோரியும் 2011 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத்துறை முறையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஷிம்லா பஸ் விபத்தில் 44 பேர் உயிரிழப்பு!



இமாச்சல் பிரதேசம் ஷிம்லாவில் நேற்று புதன்கிழமை காலை இடம் பெற்ற பஸ் விபத்தில் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஷிம்லாவில் இருந்து தியூனி என்ற இடத்துக்கு தனியார் பஸ் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தது. இதில், சாரதி மற்றும்நடத்துநர் உட்பட 56 பேர்பயணித்தனர். மலைப்பாங்கானநெர்வா பகுதியருகேசென்றுகொண்டிருந்த போது, பேருந்து ஒரு பக்கமாகச் சரிந்து உருண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

இதுவரை 44 பேரின் சடலங்கள்கிடைத்துள்ளன என்றும் எஞ்சிய 12 பேரும் உயிரிழந்திக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அமெ.முன்னாள் ஜனாதிபதி புஷ் வைத்தியசாலையில்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ் நிமோனியாக் காய்ச்சலால் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள ஹியூஸ்டன் நகர் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார் என்று அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

92 வயதுடைய ஜோர்ஜ் புஷ் இவ்வருட ஆரம்பத்திலும் நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பிரிட்டனில் பொதுத்தேர்தல் பிரதமர் மே திடீர் அறிவிப்பு



### எகிறியது பவுண்ஸின் பெறுமதி

லண்டன், ஏப்.20

பிரிட்டனின் நடப்பு நாடாளுமன்றத்தின் ஆயுட் காலம் இன்னும் மூன்றாண்டுகள் இருந்தாலும், பிரதமர் தெரசா மே எதிர் வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதி திடீர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார். இதையடுத்து பவுண்ஸின் பெறுமதி அதிகரித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து பிரிட்டன் பங்குச் சந்தையிலும் தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பிரிட்டன் நாடாளுமன்றின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு இன்னும் மூன்று வருடங்கள் எஞ்சியுள்ள நிலையில் பிரதமர் மேயின் இந்த திடீர் அறிவிப்பே தளம்பலை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பிரதமர் மே தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் தீர்மானத்தை தான் மிகுந்த தயக்கத்துடனேயே மேற்கொண்டேன். இருப்பினும், ஜூன் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதன் மூலம், பிரெக்சிற் பேச்சுகள் இலகுப்படுத்தப்படும். பிரெக்சிற் விவகாரம் தொடர்பில் பிரிட்டன் ஒருங்கிணைந்துள்ள போதிலும், நாடாளுமன்றம் ஒருங்கிணையவில்லை.- என்றார்.

இந்தநிலையில், ஜூன் மாதம் 8 ஆம் திகதி நடத்தப்படவுள்ள தேர்தல் தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு தொழிற்கட்சி ஆதரவளிக்கும் என்று கட்சித் தலைவர் ஜெரமி கோர்பின் தெரிவித்தார். இந்தத்தேர்தல் முடிவைத் தான் வரவேற்கிறார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# பிரான்ஸில் அகதிகளுக்கு அனுமதி அளிக்கமாட்டேன்

### ஜனாதிபதி வேட்பாளர் லீ பென் அதிரடிக்கருத்து



பரிஸ், ஏப். 20

பிரான்ஸ் நாட்டில் கட்டுப்பாடு இல்லாத அளவுக்கு அகதிகளுக்கு அனுமதி அளிக்க முடியாது என்று ஜனாதிபதி வேட்பாளரான லீ பென் தெரிவித்துள்ள கருத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நாடு முழுவதும் பிரசாரங்கள் சூடு பிடித்து வருகின்றன.

தேசிய முன்னணி கட்சியைச் சேர்ந்த லீ பென் என்பவர் தற்போது ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டு வருகிறார்.

இந்தநிலையில், பிரான்ஸ் தலைநகரான பரிஸில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் லீ பென் பேசியுள்ளார். இதன் போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

பிரான்ஸ் நாட்டில் அளவுக்கு அதிகமான அகதிகளை அனுமதிக்க முடியாது. பிரான்ஸ் நாடு குடிமக்களுக்குச் சொந்தமானநாடாகச்செயற்படவில்லை.

எண்ணிக்கை இல்லாத அளவில் அகதிகளுக்கு அனுமதி கொடுத்தால், பிரான்ஸ் நாட்டில் தீவிரவாதம் அதிகரித்து விடும்.

புகலிடம் கோரி வரும் அகதிகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்களை இயற்றுவேன்.

ஜனாதிபதியாகத் தெரிவானால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 10 ஆயிரம் புலம்பெயர்ந்தவர்களைத் தாய்நாடுகளுக்கு திருப்பி அனுப்புவேன். நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தால் பரிஸ் மற்றும் நைஸ் நகரங்களில் தீவிரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்திருக்கா. -என்றார். (எ)

## தெற்கு பிலிப்பைன்ஸில் பஸ் விபத்து; 25 பேர் உயிரிழப்பு



தெற்கு பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 25 பேர் உயிரிழந்தனர். மேலும் 22 பேர் படுகாயமடைந்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்த பஸ் பள்ளம் ஒன்றில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது, மேலும் இந்த விபத்து இடம்பெற்றவேளையில் 60 இற்கும் அதிகமானவர் பஸ்ஸில் பயணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# அமெரிக்க நகர் மீது வடகொரியா ஏவுகணை தாக்கும் காணொலி

### வடகொரிய ஜனாதிபதியின் பிறந்த தினத்தன்று திரையரங்கில்



அமெரிக்கா - வடகொரியா இடையே பதற்ற நிலை முற்றியுள்ள நிலையில், வடகொரியா ஏவிய ஏவுகணை ஒன்று அமெரிக்க நகர் ஒன்றில் விழுந்து வெடிப்பது போன்ற காட்சி ஒன்றை வடகொரியா வெளியிட்டுள்ளமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் பாட்டனார் கிம் இல் சங்கின் பிறந்த நாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. 'சூரியனின் தினம்' என்ற பெயரில் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படும் இந்த நிகழ்வில் இராணுவ அணிவகுப்பு மற்றும் இராணுவத்தின் பலத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்படும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவது வடகொரியாவின் வழக்கம்.

அதன்படி, நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில், இராணுவத்தினரின் இசை நிகழ்ச்சியொன்றும் நடத்தப்பட்டது. இதில், வடகொரியாவின் இராணுவ பலத்தை இராணுவவீரர்கள் உணர்ச்சிபூர்வமான பாடல் மூலம் வெளிப்படுத்தினர். இதையொட்டி, பிரமாண்டத் திரையொன்றில், அமெரிக்கா மீது வடகொரியா ஏவுகணைத் தாக்குதலை நடத்துவது போன்ற 'அனிமேஷன்' காணொலி ஒன்று வெளியிடப்பட்டது.

அதில், வடகொரியா ஏவும் ஏவுகணை ஒன்று பெயர் குறிப்பிடப்படாத அமெரிக்க நகர் ஒன்றின் மீது விழுந்து வெடிப்பதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அந்த ஏவுகணை வெடிக்கும் போது, அணுகுண்டு வெடிப்பதற்கு ஒப்பான எதிர்விளைவுகள் ஏற்படுகின்றமை போல் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்கக் கொடியில் உள்ள நட்சத்திரங்கள் கல்லறை மீது சொரிவது போன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், அமெரிக்கா மீது வடகொரியா அணுவாயுதத் தாக்குதலையே நடத்துவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. (எ)

## வடகொரியா மீது பொருளாதார அழுத்தங்கள் ஏற்படுத்தப்படும்!

### அமெரிக்க துணை ஜனாதிபதி தெரிவிப்பு



வொஷிங்டன், ஏப்.20

வடகொரியாவின் மீது பொருளாதார மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையில் சீனாவுடன் இணைந்து அமெரிக்கா செயற்படும் என்று அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் நேற்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடகொரியாவால் தாக்குதல் மேற்கொள்ளப்படுமேயானால் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவும் தாக்குதல் நடத்தும் என்று அவர் மேலும் கூறினார்.

ஜப்பானின் யொகோசுகா துறைமுகத்தில் திட்டமிட்ட பராமரிப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டு வரும் அமெரிக்க ரொனால்ட் ரீகன் விமானத்தைப் பார்வையிடும் நோக்கில் சென்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை அச்சுறுத்தி வரும் வடகொரியா, தனது அணுவாயுத சோதனை நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ)

# கிறிஸ் கெயிலின் அரிய சாதனையுடன் குஜராத் லயன்ஸை வீழ்த்தியது பெங்களூர்!

ராஜ்கோட், ஏப்.20

ஐ.பி.எல் அரங்கில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 21 ஓட்டங்களால் அசத்தல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.


ராஜ்கோட்டில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் குஜராத் லயன்ஸ் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற குஜராத் லயன்ஸ் அணித் தலைவர் சுரேஷ் ரெய்னா முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதையடுத்து துடுப் பெடுத்தாட களம் இறங்கிய ரோயல் சலஞ்சர்ஸ் பெங் களூர் அணியின் தொடக்க வீரர்களாக கிறிஸ் கெயில் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் களமிறங்கினர்.

இருவருமே அதிரடி காட்டி விளையாட அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது. முதல் விக்கெட்டுக்காக 122 ஓட்டங்களை இணைப் பாட்டமாக பெற்றிருந்த போது கிறிஸ் கெயில், எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவர் 38 பந்துகளில் 5 பவுண்டரிகள், 7 சிக்ஸர்களை விளாசி 77 ஓட்டங்களை பெற்றி ருந்தார்.

இதனையடுத்து அணித் தலைவர் கோஹ்லி 50



பந்துகளில் 7 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 64 ஓட்டங்களும், ட்ராவிஸ் ஹெட் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களும், கேதர் ஜாதவ் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களும் எடுத்து களத்தில் இருந்தனர்.

இறுதியில் பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 214 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய குஜராத் அணியின் தொடக்க வீரர் ஸ்மித் 1 ஓட் டத்துடன் வெளியேறினார்.

மறுபுறத்தில் மக்கலம் அதிரடியாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக் கையை உயர்த்தினார். அவருடன் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா 8 பந்துகளில் 2 புண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 23 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார்.

இதனையடுத்து, ஏரொன் பின்ச் 19, டினேஷ் கார்த்திக் 1, ரவீந்திர ஜடேஜா 23 ஓட்டங்களும் எடுத்து வெளியேற குஜராத் அணி தடுமாறியது.

எனினும், குஜராத் அணி யின் இஷான் கிஷான் 16 பந்துகளில் 2 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் என 39 ஓட் டங்கள் எடுத்து வெளியேறி னார். பெங்களூர் அணி சார் பில் பந்துவீச்சில் யுஸ்வேந் திரா சஹால் 3 விக்கெட்டு களை வீழ்த்தினார்.

இறுதியில் குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக் கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்கள் எடுத்து 21 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.

'சிக்ஸர் மன்னன்' என சிறப்பாக அழைக்கப்படும் மேற்கிந்திய தீவுகள் அணி யின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் இருபதுக்கு 20 கிரிக்கெட்டில் முடிசூடா மன்னராக விளங்கி வரு கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் அணிக்காக மட்டுமே விளையாடி வரும் கிறிஸ் கெய்ல், உலகின் பல்வேறு பகுதிகளில் நடை பெற்று வரும் தொழில் முறை கிரிக்கெட்டான இருபதுக்கு 20 லீக்கில் இடம்பிடித்து விளையாடி வருகிறார்.

இந்த லீக் தொடர்களில் சிக்ஸர் மழை பொழிவதால் கெய்லுக்கென்றே தனி ரசி கர்கள் பட்டாளம் உண்டு. குறிப்பாக இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் அவ ருக்கு அதிகளவில் ரசிகர்கள் உள்ளனர்.

இந்த தொடர் ஆரம்ப மாவதற்கு முன்னர் இருப துக்கு 20 கிரிக்கெட்டில் 286 போட்டிகளில் 9937 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 63 ஓட்டங்கள் எடுத்தால் இருபதுக்கு 20 கிரிக்கெட் வரலாற்றில் பத்தாயிரம் (10,000) ஓட்டங்களை கடக்கும் முதல் வீரர் என்ற அரிய சாதனையை படைக் கும் நோக்கத்தில் ஐ.பி.எல். 2017 பருவகாலத்தில் அவர் களமிறங்கினார்.

சன்ரைசர்ஸ் அணிக்கெதி ரான முதல் போட்டியில் 32 ஓட்டங்களும், டில்லிக்கு எதிராக 6 ஓட்டங்களும், மும்பை அணிக்கெதிராக 22 ஓட்டங்களும் எடுத் திருந்தார்.

மூன்று போட்டிகளில் 60 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் நேற்று முன் தினம் குஜராத் அணிக்கு எதிராக களம் இறங்கினார். இந்தப் போட்டியில் அவர் 3 ஓட்டங்கள் எடுத்திருந்த போது 10 ஆயிரம் ஓட்டங் களை எட்டிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். தொடர்ந்து விளையாடிய கெய்ல் 38 பந்துகளில் 5 பவுண்டரிகள், 7 சிக்ஸர்களுடன் 77 ஓட்டங்களைக் குவித்தார்.

இருபதுக்கு 20 போட்டி களில் இந்தப் போட்டிக்கு முன்பு வரை 289 போட்டி களில் விளையாடியுள்ள கிறிஸ் கெய்ல் 18 சதங்கள் மற்றும், 60 அரைச்சதங்கள் அடித்திருந்தார். இதில் 736 சிக்ஸர்களும், 764 பவுண் டரிகளும் அடங்கும்.

# ஒலிம்பிக் விளையாட்டில் மீண்டும் கிரிக்கெட்: சர்வதேச கிரிக்கெட் பேரவை நடவடிக்கை!

டுபாய், ஏப். 20

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் மீண்டும் கிரிக் கெட் போட்டிகளை இணைப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2024 ஒலிம்பிக் விளை யாட்டு விழாவில் கிரிக் கெட் விளையாட்டை இணைப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்கும் பெரும் பாலான நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் சர்வ தேச கிரிக்கெட் பேரவை யின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் றிச்சர்ட்சன் தெரிவித்தவை வருமாறு:-

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் மீண்டும் கிரிக் கெட் போட்டிகளை இணைப்பது குறித்து எதிர்வரும் ஜூலை மாதத் திற்கு முன்னர் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண் டியுள்ளது. அப்போதுதான் வரையறுக்கப்பட்ட காலப் பகுதியான செப்ரெம்பர் மாதத்தில் சர்வதேச ஒலிம் பிக் குழுவிடம் விண்ணப் பிக்கக்கூடியதாக இருக்கும்.

அதன் பின்னர் கிரிக்கெட் விளையாட்டை இணைப் பது குறித்து சர்வதேச ஒலிம்பிக் பேரவை ஆராயும்.

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் கிரிக்கெட் விளையாட்டை இணைப் பதற்கு இது சரியான நேரம் என சர்வதேச கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான நாடுகள் கருதுகின்றமை யுடன் குறிப்பாக நானும்



அவ்வாறே கருதுகின்றேன்.

உலகளாவிய ரீதியில் கிரிக்கெட் விளையாட்டை பிரபல்யமடையச் செய் வதற்கு இதுதான் சரியான முடிவு என அங்கத்துவ நாடுகள் ஒரு தீர்மானத் திற்கு வந்துள்ளன.- என்றும் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் 1900 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் முதல் தடவையாக கிரிக் கெட் விளையாடப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் பெரிய பிரித்தானியாவும் பிரான்ஸும் மாத்திரமே கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்று வருகின்றமையாலும் அது சுமார் மூன்றரை மணித்தி யாலங்களுக்குள் ஒரு முடிவைத் தரு வதாலும் இந்த விளை யாட்டை 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இணைப்பதற்கான விண் ணப்பத்தை சர்வ தேச கிரிக்கெட் பேரவை எதிர்வரும் ஜூலை மாதம் சமர்ப்பிக்கவுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நடத்து வதற்கு லொஸ் ஏஞ்சலிஸ், ரோம், பாரிஸ், புடா பெஸ்ட், ஹம்பேர்க் ஆகிய ஐந்து நகரங்கள் மனு செய் துள்ளன. இவற்றில் எந்த நகரம் 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்குத் தகுதி யானது என்பது குறித்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுச்சபை வாக்களிப்பின் போது சர்வதேச ஒலிம்பிக் குழு அறிவிக்கவுள்ளது.

### பங்களாதேஷில் மத்தியஸ்தர்களின் பாரபட்சத்தை எதிர்த்து

# நான்கு பந்துகளில் 92 ஓட்டங்களை தாரைவார்த்த பங்களாதேஷ் கழகம்!



டாக்கா, ஏப். 20

பங்களாதேஷில் கிரிக்கெட் அணி ஒன்று வெறும் நான்கு பந்துகளில் 92 ஓட்டங்களை எதிரணிக்கு கொடுத்து வேண்டுமென்றே தோல்வி அடைந்துள்ளது.

லீக் போட்டிகளில் மத்தியஸ்தர்கள் பாரபட்சமாகச் செயற்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அந்த அணி தோல்வியைத் தழுவியது.

டாக்கா இரண்டாம் பிரிவு லீக் 50 ஓவர் போட்டி ஒன்றிலேயே இவ்வாறு நான்கு பந்துகளில் 92 ஓட்டங்கள் கொடுக்கப்பட்டன.

டாக்கா சிட்டி கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இரண்டாம் பிரிவு லீக் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லால்மாட்டியா கழகம் 14 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

89 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏக்சியொம் கிரிக்கெட்டர்ஸ் கழகம் வெறும் நான்கு பந்துகளில் விக்கெட் இழப்பின்றி 92 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

லால்மாட்டியா கழகத்தின் ஆரம்ப பந்துவீச்சாளர் சுஜொன் மஹ்மூத் 13 அகலப் பந்துகளையும் 3 'நோ போல்' களையும் வீசியமையுடன் அவை அனைத்தும் பவுண்டறிகளாகப் பதிவாகின. அதாவது, சட்டபூர்வ பந்து வீசப்படுவதற்கு முன்னரே ஏக்சியொம் கழகம் 80 ஓட்டங்களைப் பெற்றது. மஹ்மூத் வீசிய நான்கு சட்டபூர்வ பந்துகளில் 3 பவுண்டறிகளை விளாசிய ஏக்சியொம் ஆரம்ப வீரர் முஸ்தாபிஸுர் ரஹ்மான் தனது அணியின் வெற்றியை நான்காவது பந்தில் உறுதி செய்தார்.

மத்தியஸ்தர்களின் மோசமான தீர்ப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே தமது அணி பந்துவீச்சாளர் அகலப்பந்துகள், மற்றும் 'நோ போல்களை' வீசினார் எனவும் லால்மாட்டிய கழக செயலாளர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முழு சுற்றுப்போட்டியிலும் மத்தியஸ்தர்களின் தவறான தீர்ப்புகளால் தமது அணி பெரிதும் பாதிக்கப்பட்டது.

நாணய சுழற்சியின்போது கூடத் தமது அணித் தலைவருக்கு நாணயம் காட்டப்படவில்லை. நாணயம் சுழற்றப்பட்டதும் எமது அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தனர். எமது அணி ஏழு ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறிக் கொண்டிருந்தது.- என்றும் தெரிவித்துள்ளார்.

முழு போட்டியிலும் லால்மாட்டியா அணிக்கு பாரபட்சம் ஏற்படுத்தும் வகையில் மத்தியஸ்தர்கள் செயற்பட்டனர் என்று பெயர் குறிப்பிடாத கழக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கழக மட்ட போட்டிகளை ஏற்பாடு செய்யும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இந்த நிகழ்வால் ஆத்திரம் அடைந்துள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்பதுடன் பிரதமர் ஷெய்க் ஹசினாவின் நெருங்கிய சகாவும் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பேச்சாளர் ஜலால் யூனுஸ் தெரிவித்தவை வருமாறு:-

இது ஒரு வழக்கத்திற்கு மாறான செயலாகும். எத்தனை அகலப் பந்துகள், எத்தனை 'நோ போல்கள்' என்று பார்க்கும்போது இது மிகவும் அதிகமானது. இது தொடர்பில் போட்டி அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளோம். அறிக்கை கிடைத்ததும் சம்பிரதாய பூர்வமான விசாரணைகளை ஆரம்பிப்போம்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

# கிரிக்கெட் வர்ணனையாளராக புதிய அவதாரமெடுக்கிறார் சங்கா!




கொழும்பு, ஏப் 20

இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் ஜாம்பவானுமாகிய குமார் சங்கக்கார எதிர்வரும் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளராக புதிய அவதாரமெடுக்கவுள்ளார்.

இதனை சர்வதேச கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள சம்பியன் கிண்ண தொடரில் குமார் சங்கக்கார கிரிக்கெட் வர்ணனையாளராக முதல்முறையாக களமிறங்கவுள்ளார்.

சங்காவுடன் இணைந்து ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங், நியூஸிலாந்து அணியின் பிரண்டன் மெக்கலம், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கிரேம் ஸ்மித் ஆகியோர் இம் முறை இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன் கிரிக்கெட் தொடரில் முதல்முறையாக வர்ணனையாளர்களாக களமிறங்கவுள்ளனர்.

இவர்களுடன் இணைந்து சர்வதேச கிரிக்கெட் வர்ணனையாளர்களான சௌரவ் கங்குலி, ஷேன் வோர்ன், மைக்கல் ஸ்லட்டர், நஷீர் ஹுசைன், மைக்கல் அத்ரென், ஷோன் பொலக், சன்ஞய் மஞ்ரேக்கர், இயன் பிஷப், ரமீஷ் ராஜா, சிமென் டியுல், ஆதர் அலிகான் ஆகியோர் கடமையாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டென்னிஸ் தரவரிசையில் செரீனா மீண்டும் 'நம்பர் வன்'



நியூயோர்க், ஏப். 20

புதிய தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள அமெரிக்க ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் தற்போது முதலிடம் வகிக்கிறார்.

இந்த நிலையில் வருகிற 24 ஆம் திகதி வெளியாகும் புதிய தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள அமெரிக்க ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ் முதலிடத்திற்கு முன்னேறுகிறார்.

தரவரிசை கணக்கீட்டில் கடந்த ஆண்டு ஜேர்மனியின் ஸ்டட்ஹர்ட் நகரில் நடந்த போர்சே டென்னிஸ் போட்டியின் முடிவு நீக்கப்படுவதன் மூலம் செரீனாவுக்கு மீண்டும் 'நம்பர் ஒன்' இடம் கிடைத்துள்ளது.

ஏஞ்சலிக் கெர்பர், ஸ்டட்ஹர்ட் டென்னிஸில் நடப்பு சம்பியன் ஆவார். இந்த ஆண்டுக்கான ஸ்டட்ஹர்ட் டென்னிஸ் போட்டி 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதில் அரை இறுதிக்கு கெர்பர் முன்னேறினால், மறுபடியும் முதலிடத்தை தட்டிப்பறிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கையை வென்ற பங்களாதேஷுக்கு பரிசு!



டாக்கா, ஏப் 20

இலங்கை அணிக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட பங்களாதேஷ் அணிக்கு அந்நாட்டு பிரதமர் 2 கோடி ரூபா காசோலை கொடுத்து வீரர்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.

பங்களாதேஷ் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று வித தொடர்களில் விளையாடியது. இதில் மூன்று தொடர்களும் சமநிலையில் முடிந்தன.

இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் ஒருதொடர் கூட கைப்பற்ற விடாமல் சிறப்பாகச் செயற்பட்ட பங்களாதேஷ் அணிக்கு அந்நாட்டு ரசிகர்கள் தற்போது வரை வாழ்த்துக்கள் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில் பங்களாதேஷ் பிரதமர் வீரர்களுக்கு இரண்டு கோடி ரூபா பரிசாக கொடுத்துள்ளார்.

இதில் ஒரு கோடி ரூபாவுக்கான காசோலையை பங்களாதேஷ் ஒரு நாள் அணி தலைவரிடமும், மற்றொரு கோடிக்கான காசோலையை பங்களாதேஷ் அணியின் டெஸ்ட் அணி தலைவரிடமும் கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கை தொடரில் சிறப்பாக செயற்பட்ட காரணத்திற்காக வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# போராடி வென்றார் ஜோகோவிச்!



மான்ட்கார்லோ, ஏப். 20

மொனாக்கோவில் நடந்து வரும் மான்ட்கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டியில் நோவக் ஜோகோவிச் பிரான்ஸின் ஜிலெஸ் சிமோனை தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமின் வீதிக்குத் தென்புறம் உள்ள 189 ஏக்கர் காணிய்ய விரைந்து விடுவிக்க இராணுவத் தரப்புத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அந்தக்காணிகள் மக்கள்குடியிருப்புப்பகுதிகளாக அமைந்த பிரதேசம் அல்ல எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

வீதிக்கு இடது பக்கம் உள்ள 111 ஏக்கர் காணியை ஓரிரு மாதங்களுக்குள் விடுவிக்கப் படைத் தரப்புத் தயாராக உள்ளது. அதில் 67 பேரின் வீடுகள், காணிகள் அமைந்துள்ளன.

இந்த இரண்டுமாகச்சேர்த்து சுமார் 300 ஏக்கர் காணியே உடனடியாக – சில வாரங்கள் அல்லது மாதத்தில் – விடுவிக்கப்படலாம் எனக் கூறப்பட்டது.

வீதிக்கு வலது புறத்தில் 232 ஏக்கர் காணி அமைந்துள்ளது. அதில்தான் எஞ்சிய 71 பேரின் காணிகள், வீடுகள் உள்ளன. அந்த 232 ஏக்கரில் சுமார் 70 ஏக்கரில் படையினரின் முகாம்கள் அமைந்துள்ளன. அதனை உடனடியாக விடுவிக்கும் சாத்தியம் இல்லைஎனக்கூறப்படுகின்றது. வீதிக்கு வலதுபுறத்தில் இந்த 232 ஏக்கரில் படைமுகாம் இல்லாத காணிகளை விடுவிப்பது குறித்தும் ஆக்கபூர்வமான சமிக்ஞை ஏதும் நேற்றைய கள ஆய்வின்போது படைத் தரப்பினால் காட்டப்படவில்லை எனத் தெரிகின்றது.

கள ஆய்வில் பெறப்பட்டதகவல்களுடன் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்தித்துக் காணி விடுவிப்புத் தொடர்பாகத் தாங்கள் பேசுவார்கள் எனக் கள ஆய்வின் பின்னர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்புக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் படை அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் காணப்பட்ட இணக்கத்தின்படி, முதலாவது கள ஆய்வு நேற்று நடந்தது.

நேற்றைய கள ஆய்வுக்கான பூர்வாங்க நடவடிக்கையாக முதலில் விசேட கூட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவப்பிரகாசம் சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்படை, விமானப்படை, இராணுவ கட்டளைத்தளபதிகள், கேப்பாபிலவு மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்கு மக்களுக்கு அனுமதியில்லையென உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தமையுடன் அவர்களைக் கூட்டத்திலிருந்து வெளியேறுமாறும் வலியுறுத்தினார். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய கேப்பாபிலவு மக்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இந்த கூட்டத்திற்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமை குறித்து மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

இந்தக் கூட்டத்தில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்தில் 30 நிமிடங்கள் இடம்பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளைப் பார்வையிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள், அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேசசெயலர் ஆகியோருடன் மக்கள்பிரதிநிதிகள் ஐந்து பேரும் சென்றனர்.

இராணுவ முகாமின் நுழைவாயிலில் மக்களின் கையடக்கத் தொலைபேசிகள் தடுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிழற்படங்களையோ, காணொலிகளையோ எடுக்க வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இதன் பின்னர் படையினர் சகிதம் குழுவினர் முகாமுக்குள் சென்று சுமார் ஒரு மணி நேரம் நிலங்களைப் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து காணியை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இதன்பிரகாரம் 111 ஏக்கர் காணிகளை மாத்திரமே தற்போது விடுவிப்பதற்கு பாதுகாப்பு தரப்பினர் இணங்கியுள்ளபோதிலும், காணி விடுவிப்புக்கான கால எல்லை குறித்த உறுதிமொழியை அவர்கள் வழங்கவில்லையென எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட கேப்பாபிலவு மக்கள், பகுதியளவான காணி விடுப்பு வரவேற்கத்தக்க விடயம் என்கின்ற போதிலும், அனைவரினது காணிகளும் விடுவிக்கப்படும் வரை தமது 'போராட்டம் தொடரும் என வலியுறுத்தினர்.

மக்களின் கோரிக்கையை செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் எஞ்சிய காணிகளை விடுப்பது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் தாம் பேச்சு நடத்துவார் எனக் குறிப்பிட்டார்.

காணி அடையாளப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

கேப்பாபிலவில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படும் என அடையாளம் காட்டப்பட்ட குடியிருப்பு அல்லாத காணிகளை விடுத்து, விடுவிக்கவேண்டிய தமது பூர்வீக காணிகளை தாம் அடையாளம் காட்டினர் என முகாமுக்குள் சென்று வந்தவர்கள் தெரிவித்தனர்

தமது வாழ்வாதாரங்களை இராணுவத்தினர் பயன்படுத்துவதை நேரில் கண்டு மிகவும் கவலையடைந்தனர் எனவும், தமது காணிகளிலிருந்து ஆயிரக்கணக்கில் தேங்காய்களைப் பறித்து அவர்கள் வைத்திருக்கின்றனர் எனவும், தமது காணிகளில் அவர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்துகின்றனர் எனவும், ஆனால்தாம் வீதியில் கிடந்தது சாகின்றனர் எனவும் அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளுக்காகச் சென்ற காணி உரிமையாளர் ஒருவர் கவலை வெளியிட்டார்.

இராணுவத்தினர் அங்கு சொகுசு வாழ்க்கை வாழ்வதனாலேயே காணி விடுவிப்பில் இழுத்தடிப்பு செய்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோரும் தெரிவித்தனர். (உ)

## மீதொட்டமுல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயரத்திற்கு குப்பை மேடு சரிந்துள்ளதாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மீதொட்டமுல்லவில் நடந்த இந்த அனர்த்தத்தில் சிக்கிய 29 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## கடல்நீரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் கலாநிதி கே.அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

யாழ். மருதங்கேணிப் பகுதியில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் இரணைமடு, யாழ்ப்பாணம் குடிநீர்த் திட்டத்திற்கு மாற்றாக மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, குறித்த திட்டத்தால் பாதிப்புக்கள் உண்டாகும் என வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் அச்சமடைந்த நிலையில், மேற்படி திட்டத்தால் சூழல் பாதிப்புக்கள் உருவாகுமா என 'நாறா' நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டு நேற்று முன்தினம் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கையில் சூழல் பாதிப்பு உருவாகும் எனச் சுட்டிக்காட்டி மருதங்கேணிக் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை உடனடியாக நிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமது ஆய்வு அறிக்கையில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கவில்லை எனச் சுட்டிக்காட்டி, யாழ். ஊடக அமையத்தில் 'நாறா' நிறுவனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபை அதிகாரிகள் இணைந்து நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் 'நாறா' நிறுவனத்தின் சமுத்திர வியற்துறைத் தலைவர் கலாநிதி அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

மேற்படி திட்டத்தை மக்கள் நிராகரிக்க 3 காரணங்களைக் கூறியிருந்தார்கள். அதில் முதலாவது காரணம் – வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் கடல் நீரில் உப்புத் தன்மை அதிகரிக்கும் என்பதே.

அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தபோது கடல்நீர் எடுக்கப்பட்டுப் பின்னர் வடிக்கட்டப்பட்டுப் பின்னர் கடலில் விடப்படும்போது அந்த பகுதியில் 22 மீற்றர் பகுதிக்குள் 2 அலகு உவர் தன்மை அதிகரிக்கும்.

ஆனால், அது நன்மை பயக்குமே தவிர தீமையாக அமையாது. அந்தப் பகுதியில் மீன் வளம் பெருகுவதற்கு இது பெரிதும் பங்காற்றும்.

இரண்டாவதாக – கடல்நீரை தரைக்கு எடுப்பதற்கு அமைக்கப்படும் குழாய்களால் மீனவர்களின் வலைகள் சேதமடையும் என்பது. அது தொடர்பாகவும் ஆராய்ந்து அந்தக் குழாய்களைக் கடலின் அடிப்பகுதியில் வைப்பதற்கு திட்டமிடப்பட்டது.

மூன்றாவதாக – கடலில் இருந்து தண்ணீரை உறிஞ்சி எடுப்பதனால் மீன்களும் உறிஞ்சப்படலாம் என்பது. அப்படியானால் இயந்திரங்களைப் பயன்படுத்தாது புவியீர்ப்பு சக்தி ஊடாக நீரைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதேபோல், எமது அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் இந்தத் திட்டத்தால் சூழலுக்குப் பாதிப்பு உள்ளதாகக் கூறப்படவில்லை. சூழலில் சிறு மாற்றம் உண்டாகலாம். அது சகல அபிவிருத்தித் திட்டங்களிலும் நடக்கும். எனவே, மருதங்கேணிப் பகுதியில் கடல்நீரை நன்னீராக்குவதில் எந்தவொரு சூழல் பாதிப்பும் இல்லை. – என அவர் கூறியுள்ளார்.

இந்த வகையில் குறித்த திட்டம் நிறுத்தப்பட்டதற்கு அரசியல் காரணங்களே பிரதானமானவை எனக் கூறப்பட்டது.

மாகாணசபை இரணை மடு – யாழ்ப்பாணம் குடிநீர்த் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேசி மூன்றாகப் பிரித்திருந்தது.

அதில் ஒன்றுதான் இந்த கடல் நீரை நன்னீராக்கும் திட்டமாகும்.

எனவே. மாகாண முதலமைச்சர் அல்லது மாகாணசபையுடன் கலந்தாலோசிக்காமல் பாரிய திட்டம் ஒன்றை நிறுத்துவதற்கான தீர்மானத்தை எவ்வாறு எடுக்கலாம் என வட மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்க நாடாளுமன்றம் அரசமைப்புக் கவுன்ஸிலாக மாற்றப்பட்டு வழிநடத்தல் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வழிநடத்தல் குழுவில் அனைத்துக் கட்சிகளும் பங்கேற்றுப் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றன.

இதற்குப் புறம்பாக ஒவ்வொரு கட்சிகளுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்திப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கு ஆதரவு திரட்டி வருகின்றது. கடந்த வாரமும் ஜே.வி.பியுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தியிருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியுடனும் எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் தனித்தனியே பேச்சு நடத்தவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடனும் கூட்டமைப்பு ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளது. மீளவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்புப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை – அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் 3 தடவைகள் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியுடனும் பேச்சு நடைபெற்றிருப்பதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விப்புத் தொடர்பாக எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லையெனத் தெரிவித்தே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வாழ்வாதார வழிகள் அனைத்தையும் முடக்கியே இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மீன்பிடிக்க முடியாதபடி தமது கடற்கரைப்பாதைகள் முடக்கப்பட்டுள்ளன எனவும், இதனை விடத் தமது விவசாயக் காணிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு, வாழ்வாதாரமின்றித் தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று கோட்டாபய கடற்படைமுகாம் வாயில் முன்பாகக் கொட் டகை அமைத்து தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ள மக்கள், இன்றும் அங்கு தொடர் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர் எனவும், நாளை அந்தப் பகுதியிலிருந்து மாவட்டச் செயலகம் வரை பேரணியாகச் சென்று மாவட்ட செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்து பதின்நான்கு நாள்கள் அவகாசம் வழங்கி, அதற்குள் உரிய தீர்வு இல்லையேல் தொடர்ச்சியான போராட்டத்தைத் தாங்கள் நடத்தவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

(உ-81)

## வீடுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்தத்திற்குள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக நேற்று முற்பகல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்தார்.

மீதொட்டமுல்ல பிரதேசத்தில் இடர் வலயத்திலுள்ள மக்களை மீட்பதற்கு முன்னுரிமையளித்து அவர்களுக்குத்தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளைப் பலப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இராணுவத்தின் உதவியுடன் எதிர்வரும் சில மாதங்களில் அப்பிரதேசத்திலுள்ள குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவும் சட்டவிரோதமாகக் குடியேறுவதைத் தடைசெய்வதற்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மீதொட்டமுல்ல அனர்த்த நிலை தொடர்பான அடுத்த முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் நாளை காலை அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இடம் பெறவுள்ளது.

நேற்றைய கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த, சாகல ரத்நாயக்க, வஜிர அபேவர்த்தன, ஏ.எச்.எம்.பௌஸி, மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

(வீடுகள் கையளிப்புத் தொடர்பாக மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## முருகனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இந்த நிலையில் தனது மகனைப் பார்க்க முடியாமை குறித்து முருகனின் தாயார் சோமணி கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வேலூர் சிறைக்குச் சென்ற முருகனின் தாயார், முருகனைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், முருகனிடம் இருந்து அண்மையில் 'சிம்' அட்டைகள் மற்றும் கைத்தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டனவாம். சிறை விதிமுறைகளின்படி, தடைசெய்யப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தினார் என முருகன்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், முருகனைச் சந்திப்பதற்குப் பார்வையாளர்களுக்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், முருகனின் தாயாரின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த முருகனின் தாயார் சோமணி, ஒரு மாத கால விசாவில் இந்தியா வந்துள்ளதாகவும், கடந்த 20 நாள்களாக முருகனைச் சந்திப்பதற்கு முயற்சி செய்த போதிலும் அது சாத்தியப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சாந்தனை மட்டும் சந்திக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், தமிழக அரசு தங்களை விடுதலை செய்யும் என்ற நம்பிக்கையில் சாந்தன் இருக்கிறார் எனவும், முருகனின் தாயார் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# வடக்கு,கிழக்கு பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கு ஒழுங்குகள்!

## மூன்று வாரங்களில் தீர்வு கிட்டும் என்கிறார் சுமந்திரன்



கொழும்பு, ஏப்.20

வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்த விடயம் தொடர்பாகப் பிரதமருடன் பேச்சு நடத்தப் பட்டது.

இதன்போது 3 வாரங்களில் அரச வெற்றிடங்களை அடையாளம் கண்டு, பட்டதாரிகளை நியமிக்க பிரதமர் உறுதியளித்தார்.

தற்போது வெற்றிடங்கள் அடையாளம் காணப்பட்டு, முகாமைத்துவ திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அமைச்சரவை அங்கீகாரத்தின் பின்னர் அந்த வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி பரிந்துரைத்துள்ள திருத்தம் சேர்க்கப்பட்டதன் பின்னர், காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கான சட்டம் அமுலாக்கப்படும் என்றுதெரி விக்கப்பட்டுள்ளது.-என்றார்.

# வலுவடைந்து வருகிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

## கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலுவடைந்துள்ளது என்று கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2016 ஆம் ஆண்டில் கட்சி சவால்களை வெற்றி கொண்டு வலுவாக முன்நோக்கி நகர்ந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின் மூலம் கட்சி 2015 ஆம் ஆண்டை விடவும் 2016 ஆம் ஆண்டில் 65 வீதம் வலுவடைந்துள்ளது என்று அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் அண்மையில் இது தொடர்பில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் வருகிறது

கொழும்பு, ஏப்.20

மோசடிகள், ஊழல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு, விசாரணை அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கவுள்ளது..

விசாரணைகள் பூர்த்தியான மூன்று முறைப்பாடுகள் தொடர்பாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் இடம்பெற்ற ஊழல் தொடர்பான அறிக்கையும் உள்ளடங்குவதாகத் தெரிவித்துள் ளது.

கடந்த அரசின் ஆட்சி காலத்தில் இடம்பெற்ற பல வேறு ஊழல்,மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாத்தளை மாவட்ட ஐ.தே.க. அணி தேர்தலில் சுயாதீனமாகக் களமிறங்கும்!

மாத்தளை மாவட்டத்திலுள்ள சகல தொகுதிகளிலும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் சுயாதீனமாகப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

மாத்தளை நகர சபையை மீட்பதற்கு முன்னாள் நகர சபை, எதிர்க்கட்சித் தலைவர் டல் ஜின் அளுவிகார தலைமையில் சுயேச்சைக் குழுவொன்று களமிறங்கவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

மாத்தளை மாவட்ட மக்கள், நல்லாட்சி அரசின் மீது பூரணமாக நம்பிக்கையை இழந்துவிட்டமையால் உள்ளூராட்சித் தேர்தலில் பிரதான இரு கட்சிகளுக்கும் வெற்றி வாய்ப்புகள் கேள்விக்குறியாகியிருக்கின்றன என்பதால் சுயேச்சையாக போட்டியிடத் தீர்மானித்துள்ளனர் என்று மாத்தளை மாவட்ட ஐ.தே.க. பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கவினரைப் போலவே சுதந்திரக் கட்சியினரும் தற்போதைய அரசின் மீது நம்பிக்கை இழந்திருக்கின்றனர் என்றும் அவர்களும் சுயாதீனமாக செயற்படக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன என்றும் டல்ஜின் அளுவிகார தெரிவித்துள்ளார். (ஐ)

# முள்ளிக்குளம் மக்கள் போராட்டத்துக்கு சிறிலங்கா முஸ்லிம் கட்சியும் ஆதரவு

நீண்ட நாள்களாகத் தங்கள் கிராம விடுவிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மன்னார் – முள்ளிக்குளம் மக்களுடன் சிறிலங்கா முஸ்லிம் கட்சியும் இணைந்து குரல் கொடுக்கும் என முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான உனைஷ் பாரூக் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சல்மான், வடமாகாண சபை உறுப்பினர் றயீஸ், வடமேல் மாகாண சபை உறுப்பினர் நியாஸ் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்களுடன், உனைஷ் பாரூக் நிலவிடுவிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைச் சந்திக்க நேற்றுச் சென்றிருந்தார். அப்போது அங்கு அவர் தெரிவித்தவை வருமாறு –

முள்ளிக்குளம் தமிழ் மக்கள் பல நாள்களாகத் தாங்கள் வாழ்ந்து வந்த தங்கள் பூர்வீகக் கிராமத்தை மீட்டெடுக்கும் நோக்குடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் உண்மையான நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காக சிறிலங்கா முஸ்லிம் கட்சியைச் சேர்ந்த நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். இந்தக் கிராமத்தைப் பொறுத்தமட்டில் நானும் இப்பகுதியைச் சேர்ந்தவன் என்ற வகையில் எனக்கு நன்கு தெரியும். இந்த முள்ளிக்குளம் கிராமம் மிகவும் பழமை வாய்ந்த வரலாறு கொண்ட கிராமம்.

இந்தியாவிலிருந்து முத்துக் குளிப்பதற்காக முள்ளிக்குளம் வந்த வரலாறு இருக்கின்றது. கி.பி. 600 ஆம் ஆண்டு இரண்டாவது மக்கபோ மன்னனால் கட்டப்பட்ட தேக்கங்கள் கூட இங்கு காணப்படுகின்றன. இது உண்மையாகவே மக்கள் வாழ்ந்த பிரதேசம்.

கடற்படையினருக்கு இதற்கருகாமையில் அரச காணிகள் இருக்கின்றன. அங்கு போய் அவர்கள் முகாமிடலாம். அதைவிடுத்து, மக்கள் வாழ்ந்த – வாழுகின்ற – இடத்தையும், விவசாய நிலங்கள், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலை போன்றவற்றில் கடற்படையினர் தங்கியிருக்கத் தேவையில்லை.

இதற்கு அரசு நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும். சிறுபான்மை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துதான் இந்த நல்லாட்சியை ஏற்படுத்தினார்கள். ஆகவே இந்த நல்லாட்சி மூலம் மக்களுக்கு நல்ல விடிவு கிடைக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் கடற்படையின்ரால் கைப்பற்றப்பட்ட – காணிகள் இதுவரைக்கும் மீட்கப்படாத – கொடுக்கப்படாத – துர்ப்பாக்கிய நிலையே இங்கு காணப்படுகிறது. ஆகவே, இந்த நிலை மாற்றம் அடைந்து மக்களின் சொந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். – என்றார். (முள்ளிக்குளம் மக்கள் போராட்டம் பற்றிய மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (உ–112)

# '457 விசா' திட்டத்தை ரத்துச் செய்தது ஆஸி.



வெளிநாட்டவர்கள் அதிகளவில் பயன்பெற்று வந்த '457 விசா' திட்டத்தை ஆஸ்திரேலியா ரத்துச் செய்துள்ளது.

வெளிநாட்டு தொழிலாளர்கள் ஆஸ்திரேலியா வந்து 4 ஆண்டுகள் குடும்பத்துடன் தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஏற்ற வகையில் '457 விசா திட்டம்' என்ற பெயரில் விசாக்கள் வழங்கிவந்தது.

கடந்த ஆண்டு நிலைவரப்படி ஆஸ்திரேலியாவில் இந்த '457 விசா' திட்டத்தின் கீழ் வெளிநாடுகளைச் சேர்ந்த 95 ஆயிரத்து 758 பேர் வசிக்கின்றன எனவும் இவர்களில் 24.6 சதவீதம்பேர் இந்தியர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், உள்நாட்டினருக்கான வேலை வாய்ப்புகளை பெருக்கும் விதத்தில் அந்த நாட்டு அரசு '457 விசா' திட்டத்தை ரத்து செய்துள்ளது.

தங்கள் நாடு குடியேற்ற நாடு என்று தெரிவித்த ஆஸ்திரேலியப் பிரதமர் மால்கம் டர்ன்புல், அது அப்படியே தொடர்கிறது என்றும் ஆனால், ஆஸ்திரேலிய வேலை வாய்ப்புகளில் ஆஸ்திரேலியர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளமையால் '457 விசா' திட்டத்தை ரத்து செய்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாகப் புதிய கட்டுப்பாடுகளுடன் கூடிய தற்காலிக விசா திட்டத்தை அமுல்படுத்தவுள்ளார் என்றும் பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஆஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல், தேசிய பாதுகாப்பு, பயங்கரவாத தடுப்பு, கல்வி, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பான பேச்சு நடத்தியதுடன் 6 உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டிருந்தார்.

இந்த நிலையில், தற்போது இந்தியர்கள் அதிகமாக பலன் பெற்று வந்த '457 விசா' திட்டத்தை ரத்துச் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யானையைச் சுட்டுக் கொன்ற சம்பவம்: விசாரணை அறிக்கை அடுத்த வாரத்தில்!

## வனவிலங்குகள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தகவல்



ஓமந்தை – கொம்பு வைத்தகுளம் பகுதியில் யானை ஒன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் கிடைக்கப் பெறவுள்ளது என்று நிலையான அபிவிருத்தி மற்றும் வனவிலங்குகள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தப் பகுதியில் குழி ஒன்றில் விழுந்த இரண்டு யானைகளை மீட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை அந்த யானைகளில் ஒன்று தாக்க முற்பட்ட வேளை, மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு யானை உயிரிழந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்பாக தற்போது சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இது தண்டனைக்குரிய குற்றம் எனவும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் சில குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. அத்துடன், அமைச்சின் அதிகாரிகள் குழு அந்தப் பகுதிகளுக்குச் சென்று ஆராயவும் உள்ளது.

எவ்வாறாயினும், தொடர்பான இரு யானைகளில் ஒன்று குழப்பத்தை விளைவிக்க முற்பட்டமையாலேயே அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று தெரியவந்துள்ளது.-என்றார்.

இதேவேளை, காட்டு யானை ஒன்றைச் சுட்டுக்கொன்ற வானவளத் துறை அதிகாரி தற்காலிகமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளார். (ஐ)

காலைக்கதிர்








தமிழின விடுதலைக்காக அகிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து போராடி உயிர் துறந்த தியாக தீபம் அன்னை பூபதியின் 29 ஆவது ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சு.சுரேன் தலைமை வகித்தார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.




# 50 கேப்பாபிலவு போராட்டம் ஆவது நாளைக் கடந்தது

## உதவி வழங்குமாறு புலம்பெயர் உறவுகளிடம் கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு மக்களின் காணிகளை படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற நிலையில் அதனை விடுவிக்குமாறு அக்காணிகளுக்குச் சொந்தமான மக்கள் குறித்த படை முகாமிற்கு முன்பாக ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 50 ஆவது நாளை எட்டியது.

ஆனாலும் இதுவரையில் ஆக்கபூர்வமான எந்தவித தீர்வு கிடைக்கவில்லை. இதனால் மக்கள் தமது காணிகள் விடுவிக்கப்படும் வரை தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லப்போகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உடல், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் வைத்திய சாலைகளுக்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை அங்கு கடந்த ஐம்பது நாள்களாக தகரக் கொட்டகை அமைத்து குடும்பமாக அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதனால் பெரும் கஷ்ட, துன்பங்களையும் அவர்கள் எதிர்நோக்கியுள்ளனர். குறிப்பாக ஒரு வேளை உணவிற்கே பெரும் கஷ்டப்படுகிறார்கள் எனவும் அந்த மக்கள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக காலை, மதியம், மாலை என மூன்றுவேளை உணவும் அங்கேயே வழங்கப்பட வேண்டியிருக்கின்றது. ஆனால் அவ்வாறு உணவை வழங்க முடியாத நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களது நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த பல வாரங்களாக அவர்கள் பாணும் பருப்பும், பருப்பும் சோறும் என்றே சாப்பிட்டு வருவதால் உடல் ரீதியாகவும் சோர்வடைந்து காணப்படுகின்றனர்.


இவ்வாறான நிலைமையிலும் அங்கு செல்கின்ற அரசியல்வாதிகள் பலரும் குறிப்பிட்ட ஒரு நேர காலம் வரை அங்கு நின்று மக்களுடன் உரையாடுவது போன்று உரையாடி விட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தும் ஒளிப்படங்களுக்கு போஸ் கொடுத்து விட்டும் சென்றுவிடுகிறார்கள் எனவும் அந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் போராட்ட இடத்திற்கு இது வரையில் பல அரசியல்வாதிகள் மற்றும் பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பன சென்றிருக்கின்ற போதும் அவர்களுக்கு ஒரு சிலரைத் தவிர வேறு எவருமே எந்தவித உதவிகளையும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போராட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகிலுள்ள பிரசித்தி பெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்குச் சென்று அங்கு உடைக்கின்ற தேங்காயை எடுத்து அதனைக் கொண்டே தாங்கள் சமைத்து வருகின்றனர் எனவும் அவர்கள் கவலையுடன் குறிப்பிடுகின்றனர்.

எனவே தான் அந்த மக்கள் தங்கள் போராட்டத்திற்குத் தீர்வு கிடைக்கும் வரையில் தாங்களுக்கான உதவிகளை – அதுவும் உணவுத் தேவைக்காகவாவது உதவிகளை – வழங்குமாறு புலம் பெயர் உறவுகளிடம் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



மலர்வு 15 . 07 . 1956

உதிர்வு 17 . 04 . 2017

"தேசபந்து, தேசமான்ய, சாமமான்ய"

## பெரியதம்பி நடராஜா சுகுமார் (J.P)MSI

(இளைப்பாறிய நில அளவையாளர் மற்றும் மட்டம் பார்ப்பவரும், நீதி மன்ற ஆணையாளரும்)

ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி நடராஜா சுகுமார் 17.04.2017 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி நடராஜா – சௌந்தர்யநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சுப்பிரமணியம் மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அனுசுயாவின் அன்புக் கணவரும், அமுதா, சிவகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (லண்டன்), ரவீந்திரகுமார் (லண்டன்), சந்திரமோகன் (கனடா), சுகிர்தமலர் (பிரான்ஸ்), இளங்குமரன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுஜன் (Vastec Computer, வவுனியா), கேதீசன் (Ocean பல்கலைக்கழக மாணவன்), சுகந் (உபபொலிஸ் பரிசோதகர் – மன்னார்), டுசாந்திகா (ஆசிரியர் – சிதம்பரபுரம் மகா வித்தியாலயம் – வவுனியா), டுஷாந் (யாழ். பல்கலைக்கழக வர்த்தகபீட மாணவன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகிந்துசா (நிர்வாக உத்தியோகத்தர் – பிரதேச செயலகம், நெடுங் கேணி), நிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.04.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வெளிக்குளத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"மாருதி மஹால்"
வெளிக்குளம், வவுனியா.
077 0878235,
071 1037370

தகவல்:
குடும்பத்தினர்.

(c/367)



மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு கொலன்னாவை, மீதொட்டமுல்ல டேரன்ஸ் என் டி சில்வா மகாவித்தியாலயத்தில் அகதிகளாகத் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கான உதவிப் பொருள்களை சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள அதிபரிடம் கையளித்தார். பஞ்சு மெத்தைகள், அவசர மின்குமிழ் லாம்புகள் என்பன கையளிக்கப்பட்டன. அருகில் முன்னாள் வல்வெட்டித்துறை நகர பிதா க.சதீஸும் நிற்கின்றார். (உ)